பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 14 ஞாயிற்றுக்கிழமை (29-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:33

# அடுத்த சுற்றுப் பேச்சில் புலிகள் கடும் போக்கைக் கடைப்பிடிப்பர்

## உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தால் இந்நிலை

லண்டன்,டிசெம்பர்29

**அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான நான்காவது சுற்று நேரடிப் பேச்சுகள் அடுத்த வாரம் தாய்லாந்தில் நடைபெறவிருக்கின்றன. முன்னர் போலல்லாமல் அந்தப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கடுமையான போக்கைக் கடைப்பிடிப்பர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

நான்காவது சுற்றுப் பேச்சுக்கள் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை தாய்லாந்தின் நோக்கம் பத்தோம் நகரில் உள்ள 'றோஸ் கார்டன் றிசோர்ட்' ஹோட்டலில் நடைபெறவிருக்கின்றன.

இதுவரை நடைபெற்ற மூன்று சுற்றுப் பேச்சுகளிலும் தாராளப் போக்குடனும் விட்டுக்கொடுப்புடனும் நடந்து கொண்ட புலிகள், இந்தத் தடவை இறுக்கமான - கடும் - போக்கைக் கடைப்பிடிப்பர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்பால், இடம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திலும் நேற்றுமுதல் 'புலிகளின் குரல்'

'புலிகளின் குரல்' வானொலிச் சேவை யாழ்ப்பாணத்துக்கும் நேற்றிரவு முதல் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள உபகரணங்களைப் பொருத்தி நேற்றிரவு பரீட்சார்த்தமாக யாழ்ப்பாணத்துக்கும் சேவை விஸ்தரிக்கப்பட்டது.

எவ்எம் அலைவரிசையில் 99 மீற்றரில் இந்தச் சேவையை இன்று முதல் யாழ்.மக்கள் கேட்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒலிபரப்புச் சாதனங்கள் நோர்வேயில் இருந்து கொழும்பு ஊடாகப் புலிகளால் எடுத்துவரப்பட்டமை குறித்து தென்னிலங்கையில் பெரும் சர்ச்சை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது (ம-3)

## நாட்டின் ஆள்புல ஒருமையை காக்கவேண்டியது இராணுவம்

### தளபதி பலகல்ல தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.29

நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாக்கவேண்டிய உயரிய பொறுப்பு இராணுவத்துக்கு உள்ளது என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம். இந்த நோக்கத்தில்தான் பாதுகாப்புப் படைகளின் யாழ்.தளபதி தமது யோசனையில் சில நிபந்தனைகளைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல.

உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிப்பதற்கு, புலிகளின் ஆயுதங்கள் களையப்பட



வேண்டும் என்பது உட்பட சில நிபந்தனைகளை விதிக்கும் அறிக்கை ஒன்றை யாழ்.இராணுவத் தளபதி விடுத்திருந்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய அரசு—புலிகள் இடையே விரைவில் பேச்சு

### ஏற்பாடு செய்கின்றது கண்காணிப்புக் குழு

கொழும்பு,டிசெ.29

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விவகாரத்துக்கு தீர்வுகாண, படை அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் தளபதிகளும் பங்குபற்றும் கூட்டம் ஒன்றை விரைவில் கூட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாகவிருக்கும் நான்காம் கட்டப் பேச்சுக்கு முன்பாக இந்தக் கூட்டத்தைக் கூட்ட கண்காணிப்புக்குழு இரு தரப்பினருடனும்



உயர் பாதுகாப்பு வலயங்கள் படத்தில் நிழற்றப்பட்டுள்ளன. (படம்: தமிழ்நெற்)

தொடர்பு கொள்ளவிருக்கின்றது.

இதேவேளை -

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக அக்குழுவின் உபதலைவர் ஹேக்லான்ட் கருத்து வெளியிட்டுள்ளார்.

"அன்ரன் பாலசிங்கத்தின் கருத்துக் குறித்து எமக்குப் பிரச்சினை இல்லை. தற்போதைய நடைமுறைகளை குழப்பக்கூடிய வகையில் அவசரப்பட்டு முடிவு எடுப்பதால் சமாதான முயற்சிகளில் பின்னடைவு ஏற்படக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றோம். படிப்படியாகப் பிரச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வைரஸ் காய்ச்சலால் மற்றுமொருவர் மரணம்

### நேற்று 170 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

வைரஸ் காய்ச்சல் என்று மருத்துவ வட்டாரங்களில் கூறப்படும் ஒருவகைக் காய்ச்சலினால் நேற்றும் ஒருவர் மரணமானார். இவருடன் இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தோர் எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது.

இக்காய்ச்சலால் பிடிக்கப்பட்டு நேற்றும் சுமார் 170 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வேலணை 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நவரட்ணசாமி காண்டீபன் (வயது 9) என்ற சிறுவனே நேற்று உயிரிழந்தவராவார். காய்ச்சல் காரணமாக நான்கு தினங்களுக்கு முன்னர் இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்தக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து வரும் டாக்டர்கள், மருத்துவபீட மாணவர்கள், தாதியர், சிற்றூழியர்கள் கூட இத்தகைய காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-3-15-139)

## கிரனேட்டுகளுடன் நடமாடிய இளைஞன் திருநெல்வேலியில் கைது!

திருநெல்வேலி இராணுவ முகாமுக்கு முன்பாக இரு கிரனேட்டுக்களுடன் நடமாடியதாகத் தெரிவித்து கைதான இளைஞரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

திருநெல்வேலி இராணுவமுகாம் பகுதியில் திருச்செல்வம் சுகந்தன் என்ற இளைஞன் இரு கிரனேட்டுக்களுடன் நேற்றுமுன்தினம் நடமாடிய சமயம் கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவர் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

பிரஸ்தாப இளைஞனை விசாரணை செய்த பின்னர் பொலீஸார் அவரை யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் நேற்றுமாலை ஆஜர் செய்தனர்.

இவரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-3-12)

## உரும்பிராய் சிறுமியின் மரணம்; காவலாளியான இளைஞன் கைது!

### கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவியின் மர்மமரணம் தொடர்பாக சம்பவநேரம் அந்தப் பாடசாலையில் காவல் பணியில் இருந்த இளைஞனை கொலைச் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கும்படி யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

பிரஸ்தாப வித்தியாசாலை மாணவியான செல்வராசா துவாரகா (வயது 10) என்ற சிறுமியின் மரணம் தொடர்பாக நீதிவான் நேற்று விசாரணை நடத்தினார்.

மரணவிசாரணை நடத்தமுன்னர் சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான், அங்குள்ள தடயங்களைப் பார்வையிட்டார். பாடசாலை ஆசிரியர்களுடனும் கலந்துரையாடினார்.

யாழ். ஆஸ்பத்திரியில் அவர் நடத்திய மரணவிசாரணையில் உயிரிழந்த மாணவியின் தாயாரான செ.தவனேஸ்வரி (வயது36), மாணவியின் வகுப்பாசிரியை ஞானபாலசிங்கம் தாரணி (வயது 21), இறந்தவரின் பேரனான செல்லன் சிவக்கொழுந்து(வயது 58), நாகமுத்து பரமலிங்கம்(வயது 62) ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

இந்த மரணம் தொடர்பாக பாடசாலையில் அச்சமயம் காவலில் இருந்த தில்லையம்பலம் ரமணன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளத்தில் தீ விபத்து!

வெலிசறவில் உள்ள கடற்படைத் தளத்தில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டது. தீ அணைக்கும் படையினர் தீயை அணைத்ததால் ஆயுதக் களஞ்சியம் பாதுகாக்கப்பட்டதாகவும் -

- தீ விபத்தால் பெரும் சேதம் ஏற்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.(ம-3)

## புனர்வாழ்வு உபகுழுவின் துணைக் குழுக்கள் அடுத்த மாதம்முதலே செயற்பட ஆரம்பிக்கும்

### பணிப்பாளர் செல்வின் தகவல்

கிளிநொச்சி,டிசெ.29

தாய்லாந்தில் எதிர்வரும் 6ஆம் திகதிமுதல் நான்கு தினங்கள் இடம்பெறவுள்ள நாலாம் கட்டப் பேச்சுக்களின் பின்னரே புனர்வாழ்வு இயல்புநிலை தொடர்பான உபகுழுவின் துணைக் குழுக்கள் செயற்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உபகுழுவின் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதி கிளிநொச்சியில் உப குழுவின் அலுவலகம் திறக்கப்பட்டிருந்தது. இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பொலீஸார் அதிரடி வேட்டை:

# பெருமளவு கசிப்பு சுன்னாகத்தில் இருவாரகால தேடுதலில் சிக்கியது

சுன்னாகம்,டிசெ.29

சுன்னாகம் பொலஸார் கடந்த இரு வாரங்களில் தொடர்ச்சியாக நடத்திய அதிரடி வேட்டையில் பெருமளவு கசிப்பு மற்றும் கோடாவை கைப்பற்றியுள்ளனர்.

மயிலணி, குப்பிளான், ஊரெழு, பொக்கணைப் பகுதிகளிலேயே இவை கைப்பற்றப்பட்டன. இத்தேடுதலில் 63 பெரிய பரல்களிலும், 45 சிறிய கான்களிலும் வைக்கப்பட்டிருந்த கசிப்பு மற்றும் கோடாவையும் அவற்றை உற்பத்தி செய்யும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.



சுன்னாகம் பொலீஸார் கைப்பற்றிய கசிப்பு பரல்களுடன் பொறுப்பதிகாரி மற்றும் பொலீஸாரும் காணப்படுகின்றனர். *(படம் : சுன்னாகம் செய்தியாளர்)*

மொத்தமாக 80 ஆயிரம் றாம்ஸ் (10 ஆயிரம் போத்தல்) கோடாவும், 4 ஆயிரத்து 800 றாம்ஸ் (600 போத்தல்) கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக 17பேர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இக்குற்றவாளிகளுக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித பெர்னாண்டோ தலைமையில் சப்இன்ஸ்பெக்டர்களான குணவர்த்தன, குணதிலக்க, சார்ஜன்களான புஷ்பகுமார, திலக், கணேஸ், மகேஸ்வரன், பிரதீப், நாணயக்கார, வீரசிங்க ஆகியோரடங்கிய பொலஸ் குழுவினரே மேற்படி பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

(ம-27)



அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் 'எய்ட்ஸ்' தொடர்பான செயலமர்வு ஒன்று நேற்று அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்தச் செயலமர்வில் வடமத்திய மாகாண பொதுச் சுகாதார வைத்திய நிபுணர் டாக்டர் டி.டபிள்யூ. எம்.பாலித பண்டார கருத்துரை வழங்குவதையும் செயலமர்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அற்புதன்)*



# சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரு வழிமுறையே சமஷ்டி தீர்வு

## அமைச்சர் பீரிஸ் விளக்கம்

கொழும்பு,டிசெ.29

சமஷ்டி, நாட்டைப் பிளவுபடுத்தும் தீர்மானமல்ல. நாட்டில் அமைதியை ஏற்படுத்தி சமாதானத்தை அனைவரும் அனுபவிக்கச் செய்யும் ஒரு வழிமுறையே அது.

சமஷ்டித் தீர்வு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அதிகாரப்பரவலாக்கல் தீர்வு பற்றி எவரும் அச்சங்கொள்ளத் தேவையில்லை. சமஷ்டி என்பது நாட்டைப் பிளவுபடுத்தும் தீர்மானம் அல்ல. நாட்டில் அமைதியை ஏற்படுத்தி சமாதானத்தை மக்களுக்கு வழங்கும் ஒரு தீர்வாகும்.

சில கட்சிகள் சமாதானத்தை விரும்பாது தமது சுயநலன்களுக்கே அதிக முக்கியத்துவத்தினை வழங்கி வீணான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன. இது ஆவேசமானதே தவிர ஆக்கபூர்வமான ஒன்றல்ல.

ஒருபோதும் இரண்டு பிரதமர்களோ இரு படைத்தளபதிகளோ நியமிக்கப்படப்போவதில்லை. நாட்டில் அலகு ரீதியாக வெவ்வேறு ஆட்சிகள் நடந்தாலும் ஒரு நிர்வாகத்தின் கீழேயே அவை அமையும்.

தாய்லாந்தில் அடுத்தமாதம் 6ஆம் திகதி இடம்பெறவிருக்கும் பேச்சுக்களின் போதும் -

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜப்பானில் இடம்பெறும்போதும் -

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பலப்படுத்துவது குறித்தும் மனித உரிமைகள் சம்பந்தமாகவும் ஆராயப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்கென நிறுவப்பட்டுள்ள குழுக்களின் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் பரிசீலனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் ஏற்கனவே கலந்துகொண்டோரே அரசுத் தரப்புப்



பிரதிநிதிகளாக கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இந்தப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக எந்தவிடயமும் ஆராயும் நோக்கம் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-12)

# திருமலையில் விரைவில் புதிய நீதிமன்றக் கட்டடம்

## ஜனவரியில் அடிக்கல் நடப்படும்

திருகோணமலை,டிசெ.29

திருகோணமலையில் நிரந்தர நீதிமன்றக் கட்டடம் ஒன்று மூன்றரைக் கோடி ரூபா செலவில் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் அடுத்த மாதம் 15ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பிக்கப்படவிருக்கும் பூர்வாங்கப் பணிகள் தொடர்பான நிகழ்வில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை நட்டுவைப்பார். நீதி அமைச்சின் செயலாளர் தாஹரா விஜயதிலகவும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

நீதிமன்றக் கட்டடத் தொகுதி நான்கு மாடிகளைக் கொண்டதாக சகல வசதிகளோடும் அமையவிருக்கிறது. இந்தக் கட்டடத் தொகுதியில் மேல்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், தொழில் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்கள் இயங்கவுள்ளன.

இதுவரை இவை பழைய கட்டடங்களில் இயங்கி வந்தன. ஆயினும் தொழில் நீதிமன்றம் இல்லாத ஒரு குறை காணப்பட்டது. இதனால் மக்கள் பெரும் சிரமத்தை அனுபவித்து வந்தனர்.

கடந்த நவம்பர் மாதம் 2 ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதியரசர் அமீர் இஸ்மாயில் தலைமையிலான குழு திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தபோது அந்த குழுவுக்கும் சட்டத்தரணிகள் சங்கத்தினருக்கும் இடையில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைப்பது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. (ம-290)

# உரும்பிராய் மாணவி கொலை செய்யப்பட்டாரா? இழுத்துச்சென்று கிணற்றில் வீசியமைக்கு தடயம்!

யாழ்ப்பாணம்,டிசெ.29

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் கிணற்றிலிருந்து 10 வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. சிறுமியின் மரணத்தில் மர்மம் இருப்பதாக யாழ். நீதிமன்றம் சந்தேகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறுமியின் மரணத்தின் பின்னணியில் உண்மையில் என்ன நடந்தது என்பதே தற்போது எழுந்துள்ள சந்தேகத்துக்குக் காரணம்.

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட வகுப்புகள் விடுமுறைக் காலமான இப்போது தினமும் காலையில் இடம்பெற்றுவருகின்றன.

இந்த வகுப்பில் தினமும் 30 மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வகுப்பில் 14பேரே பங்குபற்றினர். இந்த வகுப்புக்கு ஒழுங்காகச் சமுகமளிக்கும் செல்வராசா துவாரகா(வயது 10) என்ற மாணவி நேற்றுமுன்தினம் சமுகமளிக்கவில்லை.

முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமான அன்றைய வகுப்பு 10.30 வரை இடம்பெற்றது. அதன்பின்னர் அந்த வகுப்பை நடத்திய தொண்டர் ஆசிரியை பாடசாலையை விட்டு வெளியேறிய சமயம், வழியில் துவாரகாவின் சகோதரியை சந்தித்துள்ளார். "உமது தங்கை ஏன் இன்று வகுப்புக்கு வரவில்லை?" என்று அவரிடம் கேட்டார். அதற்கு, "வழமைபோன்று காலை 8.30 மணிக்கே தங்கை பாடசாலைக்கு வந்துவிட்டார்" என அந்தச் சகோதரி பதிலளித்துள்ளார்.

வீட்டுக்குச் சென்ற சகோதரி, தங்கை பாடசாலைக்கு வரவில்லை என ஆசிரியை தெரிவித்த தகவலை தாயிடமும் உறவினர்களிடமும் தெரிவித்தார். தகவலைக் கேட்டு பதற்றமடைந்த தாயும் உறவினர்களும் மாணவியைத் தேடி பாடசாலை நோக்கி ஓடியுள்ளனர். ஆனால், பாடசாலையில் சிறுமி இல்லை. பாடசாலையின் சகல இடங்களையும் அவர்கள் சல்லடை போட்டுத் தேடினர். மாணவி கிடைக்கவில்லை.

மாணவியின் பேரனான செல்லன் சிவக்கொழுந்து(வயது 58) என்பவர் தற்செயலாக பாடசாலைக்கு அருகில் சுமார் 15 அடி தூரத்தில் அமைந்திருந்த கிணற்றை எட்டிப் பார்த்தார். அங்கு மாணவி தண்ணீரில் மிதப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அதன்பின்னர் அவரின் மைத்துனரான நாகமுத்து பரமலிங்கம், மாணவியின் சடலத்தை கிணற்றிலிருந்து வெளியே தூக்கி வந்தார்.

இதற்கிடையில் -

சம்பவ தினம் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பாடசாலையில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த காவலாளியிடம் திறப்பைப் பெற்றே ஆசிரியை வகுப்பு நடத்தியதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வகுப்பு முடிந்து வெளியேறும் போது ஆசிரியை திறப்பை மீண்டும் காவலாளியிடம் ஒப்படைத்துள்ளார்.

பொலீஸாரும் நீதிவானும் நேற்று சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

அவர்களது விசாரணைகளில் -

பாடசாலைக்குப் பின்புறமாக அமைக்கப்பட்டு வரும் புதிய மாடிக் கட்டடத்தின் மாடிப்படிகளின் கீழ் உள்ள ஒடுக்கமான பகுதியில் சிறுமியின் செருப்புகளின் அடையாளம் என்று சந்தேகிக்கப்படும் அடையாளங்கள் காணப்படுவதும் -

கிணற்றிலிருந்து 15 அடி தூரத்தில் உள்ள குப்பை கொட்டும் இடத்தில் மாணவியின் செருப்புகள் விசிறி எறிந்த நிலையில் கிடந்துள்ளமையும் -

அந்த இடத்திலிருந்து கிணற்றடிக்குச் செல்லும் பாதையில் உடல் ஒன்றை இழுத்துச் சென்ற அடையாளம் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடயங்களை அடுத்து மாணவி பலாத்காரமாக இழுத்துச் செல்லப்பட்டே கிணற்றில் போடப்பட்டுள்ளார் என்று சந்தேகம் எழுந்துள்ளது. வித்தியாசாலையில் குடிதண்ணீர் 'பைப்' உள்ளதால் மாணவி கிணற்றடிக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

மாணவியை இழுத்துச் சென்று கிணற்றில் போடுவதற்கு முன்னர் அவர் வல்லுறவு முயற்சிக்கு உட்படுத்தப்பட்டிருக்கக்கூடும் என்ற கோணத்திலும் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிறுமியின் மரணத்துக்கு, முன்னைய பகை உணர்வுகள் ஏதாவது காரணமாக இருந்திருக்கலாமா என்று மற்றொரு கோணத்திலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

உயிரிழந்த மாணவியின் தந்தை ஏழு வருடங்களுக்கு முன்னர் சுகவீனம் காரணமாக மரணமாகியிருக்கிறார். மாணவிக்கு ஓர் அண்ணாவும் ஓர் அக்காவும் இருக்கின்றனர். (ம-3)



மாணவி செல்வராசா துவாரகா

# செச்சினிய அரசு அலுவலகத்தின் மீது தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்கு!

## வெடிமருந்து ஏற்றிய வாகனங்கள் மோதி வெடித்ததில் 46பேர் பலி!!

குறோஸ்னி,டிசெம்பர்29

**செச்சினியத் தலைநகர் குறோஸ்னியில் அமைந்திருந்த அரசு தலைமைப் பணிமனைக் கட்டடம் குண்டுத் தாக்குதலில் தகர்ந்தது.**

**பலத்த காவலுக்கு மத்தியில் அமைந்திருந்த கட்டடம் மீது வெடிமருந்தேற்றிய இரண்டு வாகனங்கள் அடுத்தடுத்து வந்து மோதி வெடித்துச் சிதறின. இதனால் கட்டடம் தவிடுபொடியானது. 46 பேர் மாண்டனர். பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்திருக்கின்றனர்.**

வெள்ளிக்கிழமை நண்பகல்வேளை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல், ரஷ்யாவை அதிர வைத்திருக்கிறது.

குறோஸ்னியில் அமைந்துள்ள அரசு தலைமைக் கட்டடத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தன. எனினும் வெள்ளிக்கிழமை நண்பகல் மதிய உணவு வேளை




யில் இரண்டு வாகனங்கள் - ஒன்று டிரக், அடுத்தது ஜீப் - பிரதான கட்டடம் மீது வேகமாக வந்து மோதின. இரு பெரும் குண்டு வெடிப்புக்களால் அந்தப் பிரதேசமே அதிர்ந்தது. அரசுக் கட்டடம் சிதறிச் சின்னாபின்னமாகியது. இடிபாடுகளிலிருந்து 40இற்கும் மேற்பட்டோரின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. மேலும் 50 பேர் கடும் காயங்களுக்குள்ளாகியிருக்கின்றனர்.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது.

காயமடைந்தவர்களில் செச்சினிய துணைப் பிரதமரும் பாதுகாப்பு கவுன்ஸிலின் தலைவரும் அடங்குவர்.

அரசுக் கட்டடத்தைச் சூழ போடப்பட்டிருந்த தடுப்புக்களைத் தாண்டி இரண்டு வாகனங்களும் கட்டடத்தை மோதித் தாக்கியிருக்கின்றன. அதி சக்திவாய்ந்த பெருமளவு வெடிமருந்து கொண்டு தற்கொலையாளிகள் இந்தத் தாக்குதலை நிறைவேற்றியிருக்கின்றனர்.

தாக்குதலைத் தாங்களே நடத்தியதாக செச்சினியத் தீவிரவாதிகள் தங்கள் இணையத் தளம் மூலம் உரிமை கோரி இருக்கின்றனர்.

இந்தத் தாக்குதலைக் காட்டுமிராண்டித்தனமானது என்று வர்ணித்திருக்கும் அதிபர் புடின் சமாதான நடவடிக்கைகள் தொடரும் என்றும் அறிவித்தார். (ஐ)






செச்சினியாவில் தற்கொலைத் தர்க்குதலுக்கு உள்ளான கட்டடத்திலிருந்து காயமடைந்தோர் வெளியேற்றப்படுவதை மேற்படத்திலும், சம்பவ இடத்தில் இரு சடலங்கள் கருகிய நிலையில் கிடப்பதை கீழ்ப்படத்திலும் காணலாம்.

## கென்ய அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சி முன்னிலை!

நைரோபி,டிசெ.29

கென்யாவில் நடந்த அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் மவாய் கிபாகி (வயது 71) முன்னிலை பெற்றுள்ளார். கடந்த 24 ஆண்டுகளாக அதிபராக இருந்து வரும் டானியல் அரப் மொயின் பதவிக்காலம் இதன் மூலம் முடிவுக்கு வரவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சி படுதோல்வி அடைந்துவிட்டது. எதிர்க்கட்சியான தேசிய ரெயின்போ கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது. இக்கூட்டணியின் சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்ட மவாய் கிபாகி அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவது உறுதியாகிவிட்டது. (ஒ)

## கைவிடப்படும் பெண் குழந்தைகள்: தமிழகம் எதிர்நோக்கும் புதிய சவால்

சென்னை,டிசெ.29

தமிழகத்தில் பெண் குழந்தைகள் பெற்றோரால் கைவிடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக சமூகநல ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் மட்டும் சென்னையில் 4 மருத்துவமனைகளில் தலா ஒரு சிசு பிறந்த கையோடு தாய்மார்களால் கைவிடப்பட்டுள்ளது.

வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த தாய்மாரே தமக்கு பிறந்த சிசுக்களை மருத்துவமனைகளில் கைவிட்டு, சொல்லிக்கொள்ளாமல் சென்றுவிடுகின்றனர்.

இறுதியாக நடந்த சம்பவத்தில் மதுரை மருத்துவமனையில் பொய்யான பெயரில் பதிவினை மேற்கொண்ட கர்ப்பிணி ஒருவர் இரட்டைப் பெண் குழந்தைகளைப் பிரசவித்தார். அதில் ஒன்று இறந்துவிட்டது. மற்றக் குழந்தையை மருத்துவமனையில் கைவிட்டுவிட்டு அப்பெண்மணி தலைமறைவாகிவிட்டார்.

இவ்வாறு பெண் குழந்தைகளை கைவிடுவது தமிழகத்தில் குறிப்பாக பின்தங்கிய கிராமப் புறங்களில் அதிகரித்து வருகின்றன. இது சமூகப் பிரச்சினையாக மட்டுமன்றி தமிழக அரசுக்கும் பெரும் சவாலாக உருவெடுத்து வருகிறது.

பெண் குழந்தையை வளர்ப்பதற்கு மட்டுமன்றி அக்குழந்தையை வளர்த்த பின்னர் சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைப்பதுவரை கணிசமான பணம் தேவைப்படுகிறது.

வறுமையான குடும்பங்களில் இது முடியாத காரியமாகிறது. இந்தத் துயரத்தை எதிர்கொள்வதைத் தவிர்க்கவே பெற்றோர் பெண் குழந்தைகளை கைவிடுவதாகக் கூறப்படுகிறது.

கருவில் உள்ள குழந்தை ஆணா? பெண்ணா? என்பதை முன்கூட்டியே தெரிந்துகொள்வதை தமிழக அரசு சட்டபூர்வமாக தடை செய்துள்ளது. இதனாலேயே பெண் குழந்தைகள் அநாதரவாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக சமூகநல ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வெறும் அரசியல் ஏமாற்றுக்காக தமிழக அரசு கொண்டுவந்த இந்தத் தடையால் சமூகத்தில் ஆதரவற்ற பெண்கள் என்ற பிரிவு வேகமாக அதிகரித்து வருகிறது. இது எதிர்காலத்தில் பல சமூகச் சீர்கேடுகளை உருவாக்கும் என்று சமூகவியலாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ஒ)



தமிழகத்தில் மழலைகள் காப்பகம் ஒன்றில் வளர்ந்துவரும் அநாதரவான குழந்தைகள்.

### மீண்டும் தலிபான்கள் எழுச்சி:

## ஆப்கான் செல்லவேண்டாம் என அமெ. பிரஜைகளுக்கு எச்சரிக்கை

வாஷிங்ரன்,டிசெ.29

ஆப்கானிஸ்தான் நாட்டுக்குச் செல்லவேண்டாம் என தனது பிரஜைகளை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அல்கெய்டா தீவிரவாதிகளும், முன்னாள் தலிபான் அரசின் தீவிரவாதிகளும், கிரிமினல் குற்றவாளிகளும் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளனர். ஆப்கானின் புதிய அரசுக்கு அவர்கள் தொல்லைகளைக் கொடுத்து வருகின்றனர்.

எனவே, பயங்கரவாதிகளையும் கிரிமினல்களையும் ஒடுக்க அமெரிக்க இராணுவம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

காபூல் உள்ளிட்ட ஆப்கானின் பல்வேறு நகரங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே அரசியல் குழுக்கள் கோஷ்டி மோதலில் ஈடுபட்டு வருகின்றன. எனவே ஆப்கானுக்குப் பயணம் மேற்கொள்வதை அமெரிக்கப் பிரஜைகள் தவிர்க்க வேண்டும் என அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (ஒ)

## தீவிரவாதிகளுக்கு உதவியதாக அமெரிக்க வர்த்தகர் கைதானார்

வாஷிங்ரன்,டிசெ.29

பலஸ்தீன ஹமாஸ் தீவிரவாத அமைப்புக்கு நிதியுதவி செய்த அமெரிக்க வர்த்தகர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். ஜமீல் சர்ஸௌர்(52) என்ற அந்த வர்த்தகர் பலஸ்தீனப் பிரஜையாவார். ஹமாஸ் தீவிரவாத அமைப்புக்கு ரூ.40 லட்சம் வரை நிதியுதவி செய்தார். அதற்காக 1998இல் இஸ்ரேல் பொலீஸார் அவரைக் கைது செய்தனர். சிறையில் நான்கு ஆண்டுகள் அடைக்கப்பட்டிருந்த அவர் விடுதலை செய்யப்பட்டவுடன் இஸ்ரேல் அரசு அவரை நாடு கடத்தியது.

அமெரிக்கா நியூஜெர்சி சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கியதும், அதே குற்றத்துக்காக அவரை அமெரிக்க பொலீஸார் கைது செய்தனர். 1998இல் இஸ்ரேல் பொலீஸார் கைதுசெய்தபோது அவரிடமிருந்து இரு கடவுச்சீட்டுக்கள், சுமார் 9ஆயிரத்து 250 டொலர், 64ஆயிரம் டொலருக்கான காசோலைகள் கைப்பற்றப்பட்டன. (ஒ)

## தகவல் கிடைத்ததாம்!

லண்டன்,டிசெ.29

ஈராக்கின் அணுஆயுதத் திட்டம் குறித்து நம்பத்தகுந்த தகவல்களை ஈராக்கிய சிரேஷ்ட விஞ்ஞானி ஒருவரிடமிருந்து தாம் பெற்றுள்ளதாக ஐ.நா. ஆயுதக்கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஐ.நா.பேச்சாளர் ஹிரோ யூகி கூறுகையில் - ஈராக்கிய அரசின் பிரதான நிறுவனமொன்றின் உலோகவியல் விஞ்ஞானி ஒருவர் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஆயுதக் கண்காணிப்பாளர்களிடம் இத்தகவல்களை வெளியிட்டதாகத் தெரிவித்தார். (ஒ)

## அமெரிக்கக் கடற்படையை போருக்கு தயாராக உத்தரவு

வாஷிங்ரன்,டிசெ29


ஈராக் மீது போர் தொடங்கும் பட்சத்தில் அதற்கு ஆயத்தமாக இருக்கு மாறு கடற்படைக்கு அமெரிக்க இராணுவத் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது. இதற்காக ஜோர்ஜ் வாஷிங்ரன் உள்ளிட்ட இரண்டு விமானந் தாங்கிக் கப்பல்களையும், நிலத்திலும் நீரிலும் தாக்குதல் நடத்தக் கூடிய இரண்டு போர்க்கப்பல்களையும் மற்றும் கணிசமான கப்பல்களையும் தயார் நிலையில் வைத்திருக்கவும் கடற்படை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கடற்படைக்கு உத்தரவு அனுப்பியுள்ளதை பாதுகாப்புத்துறை உயர் அதிகாரி நேற்று உறுதி செய்தார். திகதி அறிவிக்கப்பட்டவுடன் கடற்படையின் போர்க்கப்பல்கள் வளைகுடாப் பகுதியை 96 மணித்தியாலங்களில் அடைந்துவிடும் என்றும் அவர் சொன்னார். இருப்பினும் அது எப்போது என்பது பற்றியோ ஈராக்குடன் போர் உறுதியாகிவிட்டதா என்பது பற்றியோ கூற அவர் மறுத்துவிட்டார். (ஒ)

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு

# இதோ! மீண்டும் விற்பனைக்கு வந்துவிட்டது!

# பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள்!



- பஜாஜ் பொக்சர் CT DELUX
- பஜாஜ் கலிபர்
- பஜாஜ் அஸ்பர்

**விசேட சலுகைகள்:**
தலைக்கவசங்கள் இரண்டும், ஒரு மழைக்கவசமும் வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

# அருண் விநாயகர் ரேடர்ஸ்

இல. 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
*கிளை:இல.* 262, கண்டி வீதி, சாவகச்சேரி.

(12420)


புத்தம் புதிய ருசிமிக்க உணவுகள்

பிறக்கப் போகும் புத்தாண்டை முன்னிட்டு
மறக்கமுடியாத சுவையை சுவைப்பதற்கு
**யாழ். மக்களே!**
ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள்!

தரங்குறையாத சுவையுடன் கூடிய உணவுகள்

# PALM BEACH RESTAURANT

- சிக்கின் புரியாணி
- மட்டின் புரியாணி
- செட்டி நாடு சிக்கின்
- சிக்கின் "65"
- தண்டூரிச் சிக்கின்
- லொலி பொப் சிக்கின்
- சுயிற் சிக்கின்
- சிக்கின் வறுவல்



- மட்டின் குருமா
- மட்டின் சாவ்ஸ்



அனைத்தும் அனைவருக்கும் அன்புடன் அழகோடு பரிமாறப்படுகின்றன.

உணவுகள் யாவும்
இந்திய சமையல் கலை வல்லுநர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்படுகின்றன.

ஒருநாள் சுவைபார்த்தவர்கள் மறுநாளும் சுவைக்க வருவர்.

பாம் பீச் ஸ்பெஷல், கைமாத் தோசை சுடச்சுடக் கிடைக்கும்!

குளிரூட்டிய, குளிரூட்டாத அறைகள் - வசதிகளுடன் தங்கும் அறைகள்

# பாம் பீச் றெஸ்ரோறன்ற்

10/11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 077- 733316, 077 - 153889

உங்கள் திருப்தியே எங்கள் சேவை!

(C/25735)

உதயன்

## பொறுப்புணர்ந்து செயற்படுக!

"அரசியல் பணிகளுக்காக புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வர புரிந்துணர்வு உடன்படிக்கை அனுமதியளிக்கின்றது. அரசியல் பணிகளுக்காக வந்த புலிகள், அரசின் நீதி, நிர்வாகம், சட்டம் - ஒழுங்கு ஆகியவற்றில் தலையிடலாமா?"

- இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஹக்கீம் அணித் தலைவர் ரவூப் ஹக்கீம்.

அரசுத் தரப்புக்கும் புலிகள் தரப்புக்கும் இடையிலான நான்காவது சுற்றுப் பேச்சுகள் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெறவுள்ளன.

அப்போது இந்த விடயம் குறித்து விடுதலைப் புலிகளுடன் ஆராய்ந்து ஒரு முடிவு காணப்பட வேண்டும் என்று அமைச்சர் ஹக்கீம் கூறியிருக்கின்றார்.

பேச்சுக்கான அரசுத் தரப்புக் குழுவில் அமைச்சர் ஹக்கீமும் ஒருவர். எனவே, அந்தப் பேச்சுக்களின் போது, இப்போது அவர் கூறும் விடயங்களில் உண்மை - நீதி - நியாயம் இருந்தால் அவர் கேள்வி எழுப்பலாம். அதில் தப்பில்லை.

ஆனால், இந்த நாட்டில் அரசின் கட்டுப்பாட்டில் தனியாக ஒரு பிரதேசமும் புலிகளின் கட்டுப்பாட்டில் தனியாக ஒரு பிரதேசமும் உள்ளன என்ற யதார்த்தத்தை அரசியல் தலைவர்கள் - ஹக்கீம் உட்பட அனைவரும் - புரிந்துகொள்ளவேண்டும். இந்த உண்மை, அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இரு தரப்பினாலும் எழுத்து மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய இரண்டு பிரதேச நிர்வாகங்களும் அருகருகில் இருக்கும்போது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட சிக்கல்கள் எழுவது தவிர்க்கமுடியாதது. அதனை புரிந்துணர்வோடு தீர்த்துக்கொள்ள இரு தரப்பும் இணங்க வேண்டும். அதற்கு மாறாக பகைமையுணர்ச்சியோடோ அல்லது குரோத மனப்பான்மையுடனோ இந்தகைய சிக்கலான விடயங்களை அணுகினால் பிரச்சினையும் பிணக்கும் மேலும் மேலும் தீவிரமடையுமே தவிர குறையாது.

உதாரணத்துக்கு அருகருகே - இருதரப்பினதும் எல்லைக் கோட்டுக்கு பக்கங்களில் - செயற்படும் புலிப் போராளிகளோ, படைத்துருப்புகளோ ஒருவர் பிரதேசத்துக்குள் மற்றவர் மாறிப் போகக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. அதனை குரோதப் போக்கில் - விட்டுக்கொடுக்க முடியாத - சட்டப் பிரச்சினையாக்கினால் பிணக்கின் தீவிரம் கூடுமே தவிர குறையாது.

திருமலையில் புலிகளின் போராளிகளைப் படையினர் சுற்றி வளைத்துப் பிடித்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விளக்கமறியலில் வைத்தனர்.

அதேபோன்று, வில்கம் விகாரைப் பிரதேசத்தில் தமது பிரதேசத்துக்குள் வந்த அரச துருப்புகளை புலிகள் தடுத்து வைத்தனர்.

எனினும், கண்காணிப்புக் குழுத் தலையீட்டை அடுத்து கைதான புலிகள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதேசமயம் தடுத்து வைக்கப்பட்டிருந்த துருப்புகளை புலிகளும் விடுவித்தனர்.

இதற்குப் பின்னரும் இவ்வாறு வழிமாறிப் போகும் புலிகளின் உறுப்பினர்கள் கைது செய்யப்படுவதும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவதும் தொடர்ந்தது.

இத்தகைய விடயங்களை உடனுக்குடன் பேசித் தீர்க்காமல் சட்டம், ஒழுங்கு, நீதி என்று அரச நிர்வாகம் பெரிதுபண்ணியது.

இப்போது என்ன நடந்திருக்கின்றது?

புலிகளின் பிரதேசத்துக்குள் ஆயுதத்துடன் புகுந்த சிப்பாய், புலிகளின் நீதிமன்றத்தினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

அரசுத் தரப்புக்கு இது தேவையா?

யுத்த களத்தில் கொடூரப் போர் நடத்தி மோதிக் கொண்டிருந்த இரு தரப்புகள் இன்று புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து அமைதி வழி முன்னேற திடசங்கற்பம் பூண்டு செயற்பட்டு வருகின்றன.

இந்தச் சமயத்தில் சட்டம், ஒழுங்கு, நீதி என்ற மதிக்கப்பட வேண்டிய விடயங்களைப் பூதாகரமாக்கி, கருத்து வேற்றுமைகளையும், குழப்பங்களையும் உருவாக்குவது நம்மை அமைதித் தீர்வுக்கு இட்டுச்செல்லாது.

இன்று தேவைப்படுவது விட்டுக் கொடுப்பும் புரிந்துணர்வும்தான்.

தனது கட்சிக்குள் - சமூகத்துக்குள் - தனது தலைமைக்கு இருக்கும் அதிகாரப் போட்டியை சமாளிப்பதற்காக, பிரச்சினைகளை இந்த அமைதி முயற்சிகளில் சம்பந்தப்பட்ட தரப்புகள் மீது சுமத்தி, கவனத்தைத் திசை திருப்பும் உத்தியில் அமைச்சர் ஹக்கீம் போன்றோர் ஈடுபடக் கூடாது.

அமைதி முயற்சி - சமாதான நடவடிக்கை - குழம்பினால் முதலில் பெரும்பாதிப்புக்கு உள்ளாகப் போகும் சமூகம் எது என்பதைப் புரிந்துகொண்டு பொறுப்புணர்வோடு நடந்துகொள்வது இத்தகையோருக்கும் அவர்கள் தாம் யாரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம் என்று கருதுகின்றார்களோ அவர்களுக்கும் நல்லது.

---

### எதிர்வரும் ஜனவரி தொடக்கம்

# மாத வருமான வீதத்தை அதிகரிக்க யாழ்.விவசாயிகளுக்கு விசேட திட்டம்

### உதவி ஆணையாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,டிசெ.29

யாழ்.மாவட்ட விவசாயிகளின் மாதாந்த வருமான வீதத்தை அதிகரிப்பதற்கென விசேட திட்டம் ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

- இவ்வாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்தார்.

திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்ற சிறந்த பண்ணையாளர் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அண்மைக்கால யுத்த நடவடிக்கைகளினால் யாழ்.மாவட்ட விவசாயிகளின் மாதாந்த வருமானம் 2 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாக உள்ளது. இதனை 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டம் ஜனவரி மாதம் தொடக்கம் பரீட்சார்த்தமாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்படும். பின்னர் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு அது விஸ்தரிக்கப்படும்.

இதனை சிறப்பான முறையில் பயன்படுத்தி வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு விவசாயிகள் தமது முழுமையான திறனையும் பிரயோகிக்கவேண்டும்.

விவசாய அபிவிருத்திக்கு கால்நடை வளர்ப்பு உறுதுணையாகவுள்ளது. இதனால் கால்நடை வளர்ப்பும் - விவசாயமும் இணைந்து முன்னேறவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் கட்டாக்காலி கால்நடைகளினால் விவசாயப் பயிர்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைகின்றனர்.

தீவகத்தில் 20 ஆயிரம் விவசாயிகள் வாழுகின்றனர். ஆனால் 30 ஆயிரம் கால்நடைகள் கட்டாக்காலியாக அப்பிரதேசத்தில் அலைகின்றன. இதனால் விவசாய உற்பத்தி பெரும்பாதிப்படைய நேரிடுகிறது.

கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டத்தை இல்லாமல் ஒழிப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார் அவர்.

(ஒ-11)

## மதுபோதையில் பஸ்களில் ஏறும் பிச்சைக்காரரால் தொல்லை!

சண்டிலிப்பாய்,டிசெ.29

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் பிச்சை எடுப்பவர்கள் சிலர் மதுபோதையில் பஸ்களில் ஏறி பிரயாணிகளிடம் வற்புறுத்தி காசு கேட்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

பிச்சை கேட்டு இவர்கள் பிரயாணிகளிடம் கையேந்துவதாகவும் -

பிச்சை கொடுக்காவிட்டால் முறைத்து பார்த்து தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

சிலர் மிரட்டும் வகையில் காசு கேட்கிறார்களாம். பஸ்களில் பிரயாணிகள் அதிகளவில் இருக்கும்போது மதுபோதையுடன் ஏறும் இப்பிச்சைக்காரர்களால் பிரயாணிகள் குறிப்பாக பெண்கள் பெரும் அவஸ்தைப்பட நேரிடுகிறது.

பஸ்களில் பிச்சை கேட்டு ஏறி பிரயாணிகளுக்குத் தொல்லை கொடுப்பவர்களை வடபிராந்திய போக்குவரத்துச் சபை கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பஸ் பயணிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

(ஒ-135)

### உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து விலகினால்

# ராணுவ பலச் சமநிலை பாதிக்கப்படுமென படையினர் கூறுவது பொருத்தமற்றது!

### மாவை சேனாதிராஜா எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,டிசெ.29

அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் பின்வாங்கினால் இராணுவப் பலச் சமநிலை பாதிக்கப்படும் என இராணுவத்தினர் கூறுவது பொருத்தமற்றதாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு தொடர்பாக இராணுவம் விதித்திருக்கும் நிபந்தனைகளை நிராகரித்து விடுதலைப் புலிகள் விடுத்திருக்கும் அறிக்கை தொடர்பாக பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த பேட்டியிலேயே மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று இராணுவத்தினர் குறிப்பிடும் இடங்களில் இருந்து அவர்கள் வெளியேறுவதால் இராணுவ சமபலம் பாதிக்கும் எனக் கூறப்படுவது பொருத்தமற்ற கருத்தாகும்.

இன்று யாழ்ப்பாணத்தில் முப்பது சதவீதத்திற்கும் அதிகமான பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறப்படுகின்றது. அங்கு இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

இது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலாகும்.

அத்துடன் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடையூறான ஒரு செயலாகவும் அமைகிறது. இதனாலேயே புலிகள் தமது அறிக்கையில் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டி உள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் குடியமர்வதற்காக இராணுவம் தனது நிலைகளை நகர்த்தினால் அதுவே மக்கள் மத்தியில் அவர்களுக்கு நன்மதிப்பைப் பெற்றுக்கொடுக்கும்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் எனக்கூறிக் கொண்டு வயல்களையும், பொதுமக்கள் வாழ்விடங்களையும் பொது இடங்களையும் ஆக்கிரமித்து நிற்பதில் எந்தவித பயனும் கிடையாது.

கட்டுநாயக்க விமான நிலையப் பகுதி சிங்களக் குடியிருப்புக்களையும் உயர்பாதுகாப்பையும் கொண்டிருந்தபோதிலும் தாக்குதலுக்குள்ளாகியது. இதன்மூலம் உயர்பாதுகாப்பு வலயம் என்பது வீண் பேச்சு என்பது தெளிவாகத் தெரியவருகிறது.

ஆயுதங்களைப் புலிகள் கையளிக்கவேண்டிய தேவை இதுவரை ஏற்படவில்லை. தமிழ் மக்களின் பாரிய சக்தியாக இந்த ஆயுதங்கள் உள்ளன. அதனைப் புலிகள் கையளித்தால் தமிழரது பலம் குன்றிவிடும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் இணைந்து செய்துகொண்டதே யுத்த நிறுத்த ஒப்பந்தம். ஆயுதம் ஒப்படைக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுவது பற்றியும் அவர்களே பேசிமுடிவெடுக்கவேண்டும். இராணுவத்தினருக்கு அந்த விடயத்தில் எந்த அருகதையும் கிடையாது என்று தெரிவித்தார் மாவை சேனாதிராஜா எம்.பி.

(ஒ-12)

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக இரண்டு பேர் கைது!

கொழும்பு,டிசெ.29

சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்துவதற்கு முயற்சித்த முன்னணி தனியார் நிறுவனம் ஒன்றின் உதவிப் பொதுமுகாமையாளர் ஒருவர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினராலும் சிறுவர் பாதுகாப்பு விசேட பொலிஸ் பிரிவினராலும் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

இவர் பணிபுரிந்த நிறுவனம் ஜா - எல, ஏக்கல பகுதியில் அமைந்துள்ளது. முதலீட்டுச் சபையிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. யுவதி ஒருவரைப் போன்று வேடம் தரித்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இந்த நபரைக் கைது செய்வதற்கு உதவினார்.

இதேவேளை -

பாடசாலைச் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்த முயன்ற ஆசிரியர் ஒருவர் நீர்கொழும்புப் பகுதியில் கைதுசெய்யப்பட்டு, நீர்கொழும்புப் பதில் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டார். இவரை எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கல்வியமைச்சு, சந்தேக நபரான இந்த ஆசிரியரின் சேவையை இடைநிறுத்தியுள்ளது.

(ப)

### நாளை

மார்கழி 15
திங்கட்கிழமை
(30.12.2002)
திதி : ஏகாதசி
முற்பகல் 9.14 வரை.
நட்சத்திரம்: விசாகம்
முன் இரவு 9.12 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 12.29 - 1.59
ராகுகாலம் : 7.59 - 9.29
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உலகில் மதங்களின் பெயராலேயே பல பாவங்கள் செய்யப்படுகின்றன.

### தென்மராட்சிப் பகுதியில்

## கொடுப்பனவு பெறாதோரின் விவரங்கள் சேகரிப்பு

தென்மராட்சி, டிசெ.29

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் இதுவரை குடியமர்வுக் கொடுப்பனவு ரூபா 15ஆயிரம் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவை வழங்குவதற்கான பதிவுகள் அந்தந்த கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அண்மையில் யாழ்.அரச அதிபரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் இப்பதிவுகள் மேற்கொள்வதற்கான படிவங்கள் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரால் கிராம அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவர்கள் தமது அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம், பங்கீட்டு அட்டை ஆகியவற்றை தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் சமர்ப்பித்து படிவத்தில் கையொப்பமிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு வாரங்களில் பட்டியல்கள் யாழ்.செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதால் உடனடியாக பட்டியலில் கையொப்பமிடுமாறு மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஊ-117)




## வாழ்க்கையில் உன்னதமானவையெல்லாம் ஆரம்பிப்பது 'அ' விலேயே..

எனவே 'அ' வில் தொடங்கி அனைத்தும் கற்று அகிலத்தை வெல்ல, உங்கள் பிள்ளைகளுக்கு வாய்ப்பளியுங்கள். கல்வி கற்று, இச்சமூகத்தில் உங்கள் பிள்ளைகள் தலை நிமிர்ந்து நின்றால் உங்களுக்குப் பெருமைதானே? எனவே இன்றே உங்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் சேருங்கள்.




உங்கள் பிள்ளைகளை
தினந்தோறும் பாடசாலைக்கு அனுப்புங்கள்.

மனித வள அபிவிருத்தி, கல்வி, கலாசார விவகார அமைச்சு, யுனிசெப் திட்டமிடல் கூட்டமைப்பு

unicef

# தமிழ் - முஸ்லிம் உறவை குலைப்பதா? ரூபவாஹினி செய்திகள் பற்றி குறை!

## பிரதமருக்கு மனோகணேஷன் கடிதம்

கொழும்பு,டிசெ.29

ரூபவாஹினித் தமிழ்ச் செய்திகள் தமிழ் - முஸ்லிம் உறவைக குலைத்துவிடும் வகையில் தயாரித்து ஒளிபரப்பப்படுகின்றன என்று சுட்டிக்காட்டியும், இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் கொழும்பு மாவட்ட எம்.பி.மனோகணேஷன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்.

அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதன் விவரம் வருமாறு:-

டிசெம்பர் 26 ஆம் திகதி ரூபவாஹினி செய்தியறிக்கையில் பொலன்னறுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த சில முஸ்லிம் குடிமக்களை புலிகள் கடத்தியுள்ளதாகக் கூறப்பட்டது. டிசெம்பர் 22ஆம் திகதி செய்தியறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான மாடுகளை புலிகள் கடத்தியுள்ளதாகக் கூறப்பட்டது. இந்த இரண்டு செய்திகளும் ஊர்ஜிதப்படுத்தபடாத செய்திகள். அதேவேளை, இச்செய்திகள் ஏனைய ஊடகங்களில் இடம்பெறுவதில்லை. செய்திப் பிரிவு அறிக்கைகள் தமிழ் - முஸ்லிம் பதற்ற நிலையை உருவாக்குவதற்கு திட்டமிட்டு பயன்படுத்தப்படுகின்றனவா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழ் செய்தி அறிக்கைகள் இந்த கைய நோக்கத்துடன் தயாரிக்கப்படுவதாக நான் நம்புகிறேன். தேசிய நலனுக்கு எதிரானதும், செய்தி பெறுமதி இல்லாததுமான சம்பவங்கள் செய்தியறிக்கையில் கிரமமாகச் சேர்க்கப்படுவது சமீபகாலமாக அதிகரித்துள்ளது. முஸ்லிம் பிரதேச கிராமங்களில் இடம்பெறும் சிறு சம்பவங்களுக்கும் மிகப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. இத்தகைய போக்கு தமிழ் - முஸ்லிம் சகோதரத்துவத்தைக் குலைத்துவிட இரவு பகலாக செயற்படும் சக்திகளுக்கு சந்தோசத்தை அளிக்கின்றன.

அதேவேளை, இச்சம்பவங்கள் ரூபவாஹினியின் சிங்கள, ஆங்கில செய்தியறிக்கைகளில் இடம் பெறுவதில்லை. இது சம்பந்தமாக உடனடியாகத்தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ரூபவாஹினியின் தமிழ்ச் செய்தியறிக்கைகள் சம்பந்தமாக சமீபகாலமாகப் பெரும் புகார்கள் பொதுமக்களிடமிருந்து எனக்குக் கிடைத்துள்ளன. புலிகளுக்காகப் பேசவேண்டிய உரிமையும், அவசியமும் எனக்கு இல்லை. ஆனால், கிழக்கிலங்கை செய்திகளுக்கு அளவுக்கதிகமாக இடமளித்து, சிற சம்பவங்களையும் பெரிதுபடுத்தி தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைத்து, நமது அரசாங்கத்தின் சமாதான வேலைத்திட்டத்தை குழப்பும் விதத்தில் தேசிய ரூபவாஹினி தமிழ்ச் செய்திப்பிரிவு செயற்படுவதை அனுமதிக்க முடியாது - என்று மனோகணேசன் எம்.பி. தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கை வானொலி தமிழ்ச் சேவை பணிப்பாளராக சிவராஜா நியமனம்

இலங்கை வானொலி தமிழ்ச் சேவையின் புதிய பணிப்பாளராக புழம்பெரும் ஒலிபரப்பாளர் செல்லையா சிவராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து, பல மாதங்களாக புதிய பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை.

இதைத் தமிழ் பேசும் எம்.பிக்களும் பொதுமக்களும் பலவாறாகச் சுட்டிக்காட்டியதை அடுத்தே இப்போது சிவராஜா புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் நீண்டகாலமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் உயர் பதவிகள் பலவற்றை வகித்தவர். இப்போது சந்தைப்படுத்தல் அபிவிருத்திப் பிரதிப் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றி வருகின்றார். (ஐ)

# மீனவர் இன்னல்களை, கடற்புலிகளின் துன்பங்களைச் சித்திரிக்கும் 'கடலோரக் காற்று'

## திருமலையில் அறிமுக நிகழ்ச்சி

திருகோணமலை,டிசெ.29

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சன நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட "கடலோரக் காற்று" திரைப் படத்தின் அறிமுக நிகழ்ச்சி கடந்த வியாழனன்று இரவு 6.30 மணிக்கு திருகோணமலை நியு சீல்வர் ஸ்டார் ஹோட்டலில் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.திலக், நகரப் பொறுப்பாளர் வராஜேஷ், சட்டத்தரணி காசிவாலன், எஸ்.சிறிஸ்கந்தராஜா உட்பட பலர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

திருகோணமலை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் கணேஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில வடக்கு - கிழக்கு மாகாண நிதர்சன தொடர்பாளர் வீரா உரையாற்றினார்.

அவர் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஓர் இறுக்கமான காலகட்டம் இருந்தது. அப்போதெல்லாம் கடலை நம்பி வாழ்கின்ற மீனவர்கள் செய்த தியாகம் அளப்பரியது. அத்தகையவர்களின் வாழ்க்கை இன்னல்களையும், கடற்புலிகளின் துன்ப துயரங்களையும் அதேவேளை, வீரச்செயல்களையும் படம்போட்டுக் காட்டுவதாக உருவாக்கப்பட்டதுதான் இந்தக் 'கடலோரக் காற்று'.

இது கடற்புலிகளின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெறுகின்ற சிறப்பு வெளியீடு. உண்மைச் சம்பவங்களைப் பதிவு செய்த உணர்வுபூர்வமான இரண்டு மணித்தியால முழு நீளத் திரைப்படம் இது. எதிர்வரும் 31ஆம் திகதி தமிழீழ நேரப்படி மாலை 5மணிக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் ஒரேநேரத்தில் இத்திரைப்படம் வெளியிடப்படவிருக்கின்றது.

இவ்வாறு அவர் சொன்னார். (ஐ)

# காணாமற்போன சிறுவன் கிணற்றில் வீழ்ந்து மரணம்!

புங்குடுதீவுப் பகுதியில் கடந்த 17ஆம் திகதி காணாமற்போன சிறுவன் ஒருவன் கிணறு ஒன்றிலிருந்து சில தினங்களின் பின்பு சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார்.

இத்தகவல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு, நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த சந்தனம் சுவேந்திரன் (வயது 8) என்ற சிறுவனே காணாமற்போய்விட்டதாக சிறுவனின் பெற்றோர்களால் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் கடந்த 20ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து முறைப்பாடு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு நேற்றுமுன்தினம் அங்கு சென்ற யாழ்.அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரவிடம் குறிப்பிட்ட சிறுவன் கிணற்றில் தவறுதலாக வீழ்ந்து இறந்துவிட்டான் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)




குடாநாட்டில் வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டுவருகின்றன. தென்னிலங்கை வர்த்தக நிறுவனமான அன்ரான் பைப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இப்பெயர்ப் பலகைகளில் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

(படம்: அற்புதன்)

## ஒளிவிழா

வலி.தெற்கு,டிசெ.29

கொக்குவில் காந்திஜி கிராமத் திருச்சபையின் வருடாந்த ஒளிவிழா நிகழ்ச்சிகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு, சபைக்குழு டி.எஸ்.மதியாபரணம் தலைமையில் நடைபெறும். (ஐ-152)

☆ ☆ ☆

வலி.தெற்கு,டிசெ.29

சண்டிலிப்பாய் திருச்சபையின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும், ஒளிவிழா நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை முழுநாள் நிகழ்வாக இடம்பெறவுள்ளன.

அருட்திரு.டி.எஸ்.மதியாபரணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் சமயக் கல்விக் குழு இயக்குநரும், நற்செய்திப் பணிக்குழுவின் இயக்குநருமாகிய அருட்திரு.சி.பி.சொலமன் விசேட பிரதிநிதியாகக் கலந்து கொள்வார். விழாவில் மதிய ஐக்கிய போசனமும் இடம்பெறும். (ஐ-152)

# 34 சமுர்த்தி வங்கிகள் விரைவில் செயற்படும்

யாழ்.மாவட்டத்தில் 34 சமுர்த்தி வங்கிகள் செயற்படவுள்ளன. முதலில் பரீட்சார்த்தமாக 12 சமுர்த்தி வங்கிகள் செயற்படத் தொடங்கும்.

யாழ்மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 34 சமுர்த்தி வங்கிகள் செயற்படவுள்ளன. இதில் 12 சமுர்த்தி வங்கிகள் ஜனவரி முதல் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளன.

15 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக ஒவ்வொரு சமுர்த்தி வங்கியும் பொருத்தமான மத்திய இடத்தில் நிறுவப்படும்.

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி வங்கிகள் நிறுவப்படவேண்டிய இடங்கள் மற்றும் அவற்றுக்கான ஆளணி நியமனம் என்பன பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

'சமுர்த்தி' செயற்பாட்டிற்கான மூலதனம் சமுர்த்தி உதவிக் கொடுப்பனவாக குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவியில் இருந்து பெறப்படும். அதன்மூலம் சமுர்த்தி வங்கிகள் சமுர்த்தி உறுப்பினர்களுக்கான கடன் மற்றும் உதவிகளை வழங்கும்.

சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகளை சீர்ப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதற்கு சமுர்த்தி வங்கிச் சங்கங்களும் குறிப்பிட்ட சமுர்த்தி வங்கிச் சங்கங்களை ஒன்றிணைத்து சமுர்த்தி வங்கி மகாசங்கமும் நிறுவப்படவுள்ளன.

சமுர்த்தி செயற்றிட்டம் தென்னிலங்கையில் முழுமையாக செயற்பட்டு அதன் பயன்பாடுகளை பொதுமக்கள் அனுபவித்துவரும் அதேவேளையில் வடபகுதியில் அதன் செயற்பாடுகள் பரீட்சார்த்த நிலையில் - மட்டுப்படுத்தப்பட்ட - அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-11)

# மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு 60பேர்

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் மீன்பிடியில் டிப்ளோமா கற்கை நெறிக்கு 2002 - 2003 கல்வியாண்டுக்கென 60பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட 60 பேரின் பெயர்கள் வருமாறு:-

ரி.அப்துல்வகாப், எஸ்.ஆனந்தநாயகி, எஸ்.அரவிந்தன், கே.அருணகிரிநாதன், வி.பிறிட்டோ லம்பேட், எஸ்.டினேஸ் லம்பேட், டி.டொனால்ட், எஸ். டொன்சி சூசை, எம்.ஹில்டா, என்.ஜனகதீபன் -

எச்.ஜெபநாதன் டகியா, எவ.ஜெபநேசன் குரூஸ், ஜே.ஜோசில்டா லம்பேட், ஏ.ஜுடி புனிதராஜ், ஆர்.ஜுடி றேவல், ரி.கலைச்செல்வி, ரி.கமலதீபன், கே.கார்த்திரகீதன், ஆர்.மகிந்தன், பி.நிரஞ்சன் -

ஏ.நிரோஷன் டயஸ், வி.நியூகாஷ் லம்பேட், பி.பரமானந்தம் பீரிஸ், எஸ். பார்த்தீபன், கே.பிருந்தாபன், ஆர். பிறேமலதா, ரி.புஸ்பராணி, எம்.புவனதாஸ், எஸ்.ரஜனிகாந், கே.ரங்கநாதன், ஆர்.பிரேமானந்தன் -

பி.ரதிமலர், எஸ்.ரேணுகா, எஸ். சஜிகுமார், ரி.சம்சித்தை, எம்.சங்கீதா, எஸ்.சரவணன், எஸ்.சசிகலா, எஸ்.செல்வன் செரிங்ரொன், கே.செல்வரூபன், ஏ.சர்மிலி -

ஏ.சிறோமி பேட்டில், கே.சிந்துஜா, ரி.சிவப்பிரியா, எஸ்சுபாசினி, ஆர்.சுகந்தினி, எஸ். சுதர்ஜன், பி.சுதர்சன், எஸ். தட்சாயினி, கே.தனேஸ்குமார் -

ஏ.தட்சாயினி, ரி.தங்கலதா, ரி.தவநிலவின்தாசன், ஆர்.திலகராணி, வி. திருக்குமரன், எஸ்.திருவிந்தன், பி. வாசுகி, ஏ.வின்சென்ற லம்பேட், எஸ். விஜிதா, வி.விமலராசா. (ஐ-10)

# வலி.தெற்குப் பகுதிகளில் கோழிகளுக்கு நோய்

வலிகாமம் தெற்கு,29

வலிகாமம் தெற்குப் பிரதேசங்களில் கோழிகளுக்கு அம்மை நோய் தீவிரமாகப் பரவிவருகின்றது. இந்நோயின் தாக்கத்தால் பண்ணைகளிலும், தனியார் வீடுகளிலும் வளர்க்கப்பட்டுவரும் கோழிகள் பல இறந்து வருகின்றன.

கோழிகளுக்கு அம்மை நோய் ஏற்படாதிருக்க உடனடியாக தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு வலிகாமம் தெற்கு கால்நடை வைத்தியர் கோழி வளர்ப்போரை அறிவுறுத்தியுள்ளார்.

கோழிகளுக்கு அம்மைநோய் ஏற்பட்ட பின்னர் தடுப்பூசி போடுவதோ, வைத்தியம் செய்வதோ எவ்வித பலனையும் ஏற்படுத்தாது. நோய்வருமுன் தடுப்பூசி போடுவதன் மூலமே கோழிகளை பாதுகாக்கலாம் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-152)



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் முதல் நாள் நிகழ்வின் போது பாடசாலையின் புதிய நூலகக் கட்டடத் தொகுதியினை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் திறந்து வைப்பதனையும், அருகில் பாடசாலை அதிபர் ந.சிவகடாச்சம் நிற்பதையும் காணலாம். (படம்: வலி.கிழக்கு செய்தியாளர்)



நல்லூர் நாற்சதுர சுவிசேஷ சபையின் ஒளிவிழா கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது. அங்கு நடைபெற்ற கலை நிகழ்வுகளில் சிறுமிகளின் நடன நிகழ்ச்சியை படத்தில் காணலாம்.

(படம்: நல்லூர் பரீட்சார்த்த செய்தியாளர்)

# இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி P.T.R.**

யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி,
இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை
(வியாழக்கிழமைகளில் விடுமுறை)

(12367)

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 10 - 1950



மறைவு 29 - 12 - 1982

## அமரர் சின்னையா தம்பித்துரை

(யாழ்.மாநகரசபை ஊழியர் மின்சாரப் பகுதி)

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை
விட்டுப் பிரிந்து இருபது ஆண்டுகள்
ஆனாலும் உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு அகலவில்லை அப்பா! எங்கள்
கண்ணீரை மலர்களாக்கி வணங்குகின்றோம்!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: சந்திராதேவி,
பிள்ளைகள்: தனுஜா, தர்சியா, கனிஷ்டா,
மருமகன்: உதயன்.

மூர்த்தி லேன்,
நெல்லிப்பழை.

(12282)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 07 - 1932



மறைவு 29 - 12 - 1999

## அமரர் பரமநாதர் நவரட்ணம்

*(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)*

ஆண்டுகள் மூன்று கழிந்தாலும்
ஆறாதையா எங்கள் மனம்!
நிறையாதையா உங்கள் வெற்றிடம்!!
என்றும் உங்களது ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்.

- குடும்பத்தினர்.

52, AV றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(12225)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 25 - 01 - 1943



விண்ணில் 29 - 11 - 2002

## அமரர் திருமதி தங்கராஜா சற்குணவதி

29-12-2002

உயர் வென்னும் பண்பில் தோன்றி
உளமார எம்மைக் காத்து
வளமாக வாழவைத்து
வானகம் சென்று விட்டீர்
எங்கள் தெய்வமே!

எங்கள் அன்புத் தெய்வமான குடும்பத் தலைவி மறைந்த செய்திகேட்டு எங்கள் இல்லம் நாடிவந்து ஆறுதல் கூறி பல வழிகளிலும் எமக்குப் பல்வேறு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இணுவில் றோட்,
மானிப்பாய்.

- கணவர், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

(12358)

# வேலையற்றோர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.29

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் பயின்று தொழில் வாய்ப்புகளற்ற நிலையில் உள்ளவர்களின் விவரங்களை அக்கழகம் திரட்டி வருகிறது.

விவரங்களைப் பதிவுசெய்வதற்காகச் சம்பந்தப்பட்டவர்களை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சுருக்கெழுத்து கழகத்திற்கு வருகைதருமாறும் -

பதிவுகளை மேற்கொள்ளும் வகையில், கல்விச் சான்றிதழ், பயிற்சிச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை அவர்கள் எடுத்து வரவேண்டும் எனவும் -

கழகச் செயலாளர் க.வ.சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார்.

(ஐ-9)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் கனகம்புளியடி வீதியில் சரஸ்வதி வித்தியாலய அருகில் பயனுள்ள 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
*L.K.S.மெடிக்கல் சென்ரர்,*
மீசாலை மேற்கு, மீசாலை.

(12294)

## கீர்த்தனா பயிற்சி வகுப்பு

தமிழ், ஆங்கில தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் (ஆண்,பெண்) மற்றும் தையல், தலையலங்காரம், கேக் ஐசிங், பெயின்ரிங், பூவேலைகள் ஆகிய வகுப்புகள் சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.

நீங்கள்
தொடர்புகொள்ள வேண்டிய இடம்:
*கீர்த்தனா*
டச்சு றோட்,உடுவில்.

(12239)

## கணனிக் கடைக்கு இடம் தேவை

யாழ்.நகரில் ஒரு கணனிக் கடை நடத்துவதற்கு நல்ல வியாபாரப் பகுதியில், தங்கும் வசதி அடங்கிய - சுமார் 2000 சதுர அடி விஸ்தீரணமுள்ள - இடம் உடனடியாகத் தேவை. தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

**Tel.: 0777 734903**

(12235)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

## SALE SALE SALE

**CHRISTMAS, NEW YEAR SALE**

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

DSI பாதணிகள் மலிவு விற்பனை

10% முதல் 40% வரை விசேட கழிவு

DSI மலிவு விற்பனை நிலையம்
*(பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக)*
224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/25478)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI



நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு
சிறப்புத்தள்ளுபடி விலையில்!

நவநாகரீக சேட், T.சேட், கோட்சூட், சூட் வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், பட்டுச்சாறிவகைகள், பேபிகவுண் வகைகள், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள், சல்வார்கமீஸ் வகைகள், கவுண் வகைகள், நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள்
அனைத்தையும்
கிறிஸ்மஸ், புதுவருட அதிரடித் தள்ளுபடியில் பெற்றிட



## மிலேனியம் பெஷன்

(பொம்பே பஜார்) *(மலாயன் கபே முன்பாக)*
(C/25527) 10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உலகப் புகழ்பெற்ற
LG ஸ்தாபனத்தாரின் மின்சார வீட்டுப்பாவனைப் பொருள்களை உத்தரவாதத்துடன்
நீங்கள் பெற்றிட யாழ்ப்பாணத்தில்

## "ABANS LTD இன்"

அங்கீகரிக்கப்பட்ட முகவர்

## "யாழ்ப்பாண மின்னகம்"

LG குளிர்சாதனப் பெட்டிகள் (REFRIGERATOR) SINGLE DOOR
(REFRIGERATOR) DOUBLE DOOR
BOTTLE COOLER
CHEST (DEEP) FREEZER
LG சலவை இயந்திரம் (WASHING MECHINE)
LG குளிரூட்டி (AIR CONDITONER) WINDOW TYPE
LG குளிரூட்டி (AIR CONDITONER) SPLIT TYPE
LG COLOUR T.V. 14", 20", 21"
LG FLATRON T.V. 21"
LG MICRO WAVE
LG ELECTRIC OVEN

மற்றும்

RICE COOKER, PRESSURE COOKER, MIXER GRINDER, FANS, ETC

அனைத்துக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:

## JAFFNA ELECTRICALS

*DEALERS IN ELECTRICAL & ELECTRONIC*
Authorized dealer for Abans Ltd.
Sole Distributor for Kml Cables.
94(6), STANLEY ROAD, JAFFNA.
T.P.: 021-2353

முக்கிய குறிப்பு:
குளிர்சாதனப் பெட்டி கொள்வனவு செய்பவருக்கு இலவசமாக விநியோகம் செய்யப்படும்.

(C/25641)

# அரும்பொருள் பாதுகாப்புப் பணியின் அடுத்த கட்டம் எப்படி அமைய வேண்டும்?

திட்டமிடப்பட்ட வலைப்பின்னலை யுடைய மாபெரும் வர்த்தகப் பொருள்களாக அரும்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள், கலைப் பொருள்கள் முதலியன அண்மைக் காலத்தில் முதன்மை பெற்றிருப்பதனை பொதுவாக நாம் எல்லோரும் இன்று அறிந்துள்ளோம். தேவாலயங்கள், கோயில்கள் முதலியவற்றில் திருடி விற்பனை செய்தல் தொடக்கம் வீடுவீடாகக் கொள்வனவு செய்து கடத்துதல்வரை இது விரிவடைந்துள்ளது. தென்னிலங்கை வியாபாரிகளுடன் நமது உள்ளூர் முகவர்களும் சேர்ந்து இந்தப் "பண்பாட்டுச் சொத்தழிப்பு வியாபாரத்தில்" மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

இதேநேரம் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான தடையும், பிரசார இயக்கமும் செயற்பட்டு வருகின்றது. இந்த முயற்சியின் பின்னணியில் யாழ். செயலகம், இந்து கலாசார அமைச்சு முதலியன அரும்பொருள்களைப் பாதுகாத்தல், ஆவணப்படுத்தல் முதலியவற்றை மேற்கொள்ளவென குழுக்களை நியமித்துள்ளன. இக்குழுக்கள் தமக்கான வேலைத் திட்டங்களை தயாரித்து இருப்பதாகத் தெரிகிறது. ஆனாலும் அவை முழுமூச்சுடன் ஆரம்பிக்கப்படவில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது.

மேற்படி பின்னணியில் இவ்வகையான செயற்பாடுகளை மேற்கொள்வோர் கவனிக்கவேண்டிய விடயங்களை முன்மொழியவும், கடந்த காலத்தில் இதனை ஒட்டியதாக நடந்து முடிந்த சில செயற்பாடுகளை முன்னுதாரணமாக வைத்து விவாதிக்கவும் இக்கட்டுரை முயல்கிறது.

ஒரு வருடத்திற்கு முன்னர் (22.10.2001) வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் சங்கானையிலுள்ள தமது மாநாட்டு மண்டபத்தில் அரும்பொருள்களைச் சேகரித்தல், அவற்றைப் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டுவருதல், இதன்மூலம் அவற்றின் சமூகப் பெறுமதியை அவர்களுக்கு உணர்த்துதல் முதலியவற்றை நோக்கமாகக் கொண்டு ஒழுங்கு செய்திருந்த கண்காட்சி மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இக்காட்சியை சிறப்பான முறையில் மேற்கொள்வதன் பொருட்டு சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அனைத்து பொது அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மேலும் அவர்களை ஊக்குவிக்குமுகமாக சிறந்த முறையில் செயற்படும் அமைப்புகளுக்கு பரிசில்களும் அறிவிக்கப்பட்டிருந்தன. இவ்வழைப்பையேற்று பல்வேறு சமூக அமைப்புக்கள், பாடசாலைகள், சிற்ப, ஓவியக் கலைஞர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இக்காட்சியில் பங்கேற்றிருந்தனர்.

மேற்படி காட்சியில், வட்டு. தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கம் மிகவும் சிறப்பான முறையில் செயலாற்றியிருந்தமை பலராலும் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. இவர்கள் பல்வேறு வகையான கலைநயப்பு மிகுந்த பாரம்பரிய பொருள்களை காட்சிப்படுத்தியிருந்தார்கள். மிகவும் அருந்தலான - பழைமையான - கலையம்சங்களுடன்கூடிய - வரலாற்று அடையாளங்களுமான தளபாடங்கள், உலோக வெளிப்பாடு பாடுகள், பாரம்பரிய பன்ன வேலைகள் எனப் பல்வகைப்பட்ட பண்பாட்டுச் சொத்துக்கள் இவர்களால் சேகரிக்கப்பட்டிருந்தன.

இந்தப் பின்னணியில் அச்சங்கத்தின் வளர்ச்சிக்காக பல ஆண்டுகளாகத் தன்னை அர்ப்பணித்து வரும் திருமதி துரைராஜா மகேஸ்வரியை (கமலா) சந்தித்து அவர்களின் பொதுவான செயற்பாடு, அரும்பொருள் சேகரிப்பு, அது தொடர்பான ஆர்வம் முதலியன பற்றிப் பேசினோம்.

80களில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி சங்கம், யுத்த நெருக்குவாரங்களால் செயலிழந்து மீண்டும் 1993இலிருந்து மறுபடி செயற்படத் தொடங்கியது. சமூகத்தில் பல்வேறுபட்ட நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியாக நெருக்கடிகளைச் சந்திக்கும் பெண்களை இனங்கண்டு அவர்களுக்குப் பன்னவேலை, தையல், தும்பு உற்பத்தி முதலியவற்றில் பயிற்சி அளித்து, இச்சிறுகைத்தொழில்கள் மூலம் அவர்களை முன்னேற்ற இச்சங்கம் முயல்வதாக அவர் கூறுகிறார்.

அரும்பொருள் சேகரிப்பு மீதான நாட்டம் பிரதேச செயலகத்தின் அழைப்பின் பின்னணியிலேயே உருவானதாகவும், அது இச்செயற்பாடுகளை நோக்கித் தன்னைத் திசைதிருப்பியதாகவும் அவர் கூறுகிறார். ஆனால் இந்த நாட்டம் பரிசில்கள், புகழ், பட்டம் முதலியவற்றைப் பிரதானமாகக் கொள்ளவில்லையென்றும் ஏலவே இருந்த ஆர்வத்தை அதற்குக் கிடைத்த சரியானகளமே மேலும் வலுப்படுத்தியதாக அவர் கூறுகிறார்.

இந்தச் சேகரிப்புக்காக அவர் செயற்பட்ட முறைமை அரும்பொருள்களை சேகரிக்க, ஆவணப்படுத்த, பாதுகாக்க முனையும் செயற்பாடுகளில் ஈடுபட விரும்பும் ஒவ்வொருவரும் கவனத்திற் கொள்ளத்தக்கதாக உள்ளது. இவர் இதற்காக முதலில் ஊர்மக்களோடு ஒரு பொதுச் சந்திப்பு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தார். அதில் காட்சி தொடர்பான அறிவுறுத்தல்களை எடுத்துக்கூறி, தொடர்ந்து அரும்பொருள்களை வைத்திருப்போர்களது 'பெயர், முகவரி, பொருள்களைப் பட்டியற்படுத்தி அதனை அடிப்படையாகக் கொண்டு தன் சேகரிப்பினை மேற்கொண்டார்.

ஆனால், காட்சியில் வைக்கப்பட்டிருந்த பொருள்களின் தற்போதைய நிலைவரம் தொடர்பான அவரது கூற்றுக்கள் மிகவும் வேதனை அளிப்பதாகவே உள்ளன. அச்சங்கத்தினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த ஏராளமான கலைப் பொருள்கள் 'யானைக்குட்டி இல்லம்' எனக் கூறப்படும் ஒரு வீட்டிலிருந்து பெறப்பட்டதாகவும், ஆனால் அவையாவும் பாதை திறப்பின் பின்னர் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மையின வர்த்தகர் ஒருவருக்கு விற்கப்பட்டு விட்டதாகவும் அவர் கூறினார். அரும்பொருள்கள் நிறைந்த இல்லமாக காட்சியளித்த அவ்வில்லம் அப்பொருள்களை இழந்து வெளியாகி நிற்பதற்கு யார் காரணம்?

அக்குடும்பத்தினரா?

இல்லை தென்னிலங்கை வியாபாரிகளா?

அல்லது நாம் எல்லோரும் தானா? "நாம் எல்லோரும்தான்" என்பதுதான் மிகவும் வேதனைக்குரிய உண்மை. "அடையாளத்திற்கான ஒரு நீண்ட பயணத்தை மேற்கொள்ளும் ஓர் இனம் தான் தன் அடையாளத்தை விற்கிறது என்பது எவ்வளவு முரண்".

இன்று வெள்ளம் வந்தபின் அணை கட்டும் நிலைமைதான் நிலவுகிறது. ஆனால், இப்போதும் அணைகட்டாவிட்டால் எஞ்சியதையும் அது கரைத்துப்போகும் என்பதுதான் மிக முக்கியமான விடயம். பண்பாடு பற்றிய தெளிவான அறிவும், விழிப்பும் நம்மிடையே இருந்திருக்குமானால் இவை இவ்வளவு விரைவாக 'A-9' ஊடாக எடுத்துச் சென்றிருக்கப்பட்டிருக்குமா?

இந்தக் காட்சியை நேரில் பார்த்தவள் என்ற வகையில் என்னுடைய நிலை வேதனையும், கோபமும், நிர்க்கதித்தன்மையும் நிரம்பியது. வரலாற்றுச் சின்னங்களை நாமே விற்றுக் கொண்டு எப்படித் தமிழர்களாகிய நாம் மறைக்கப்பட்ட எமது வரலாறு பற்றி வெறுமனே சிங்களவர்களை மட்டும் குற்றஞ்சாட்டி பேசிக்கொண்டு இருக்கமுடியம்?


கண்காட்சிக்காக உழைத்த மாதர் சங்க பிரதிநிதி

இக்காட்சியை நடைமுறைப்படுத்திய பிரதான நபராக சங்கானை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் இருந்துள்ளார். இக்காட்சிப்படுத்தல் தொடர்பான ஊற்றாக திரு. குணராஜா (செங்கையாழியன்) அவர்களே இருந்துள்ளார். கலாசார உத்தியோகத்தர் இதனைக் காட்சிப்படுத்துவதற்காக எவ்வளவு நெருக்கடிகளைச் சந்தித்திருந்தார் என்பதை அவருடனான நேர்ப்பேச்சுக்களின் போது அறியமுடிந்தது. பலரது ஒத்துழைப்பே வெற்றிபெற்ற இக்காட்சியின் பிரதான பின்னணிக் காரணி எனக்கூறும் அவர், மிகச் சிறந்த முறையில் பங்குபற்றியோர்க்கு பரிசில்கள் வழங்குவதாகக் கூறியிருந்தபோதிலும் பல்வேறுபட்ட தவிர்க்கமுடியாத காரணங்களினால் அதனைச் செய்ய முடியாதுபோனதையிட்டு மனம் வருந்தினார்.

**தமிழினி**

இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயம் என்னவெனில் இவ்விதமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு நமது சமூகம் எவ்வளவு தூரம் ஆதரவு கொடுக்கின்றது என்பதே. திருமதி மகேஸ்வரியைப் போலவே சமூகத்தில் இலைமறை காயாகப் பலர் இருக்கலாம். அவர்களை வெளிக்கொண்டு வருவதற்கும், பலப்படுத்துவதற்குமான சமூக வேலைத் திட்டங்களின் தேவை இன்றியமையாதது. அன்று சங்கானை பிரதேச செயலகம் மேற்கொண்ட ஒரு செயற்பாடே மகேஸ்வரி போன்ற பலரை வெளிக்கொண்டுவந்தது.


ஒவ்வொரு சமயங்களிலும் பல்வேறு வேலைத் திட்டங்களிற்காக குழுக்கள் நியமிக்கப்படுவது இன்று சர்வசாதாரண விடயமாகிவிட்டது. ஆரம்ப கட்டத்தில் அவை செயலாற்றுவதுபோல் தென்படினும், காலக்கிரமத்தில் அப்பணிகள் மந்தகதியாகி செயலற்று போவதனையும் நாம் பார்த்துள்ளோம். இத்தகைய ஒரு நிலைமை தான் இக்குழுக்களுக்கும் ஏற்பட்டு விடுமோ எனப் பல உள்ளங்கள் மத்தியில் ஐயந்தோன்றியுள்ளது.

இவையெல்லாம் ஒரு புறமிருக்க அண்மையில் சில கிராமங்களில் அரும்பொருள்கள் தொடர்பான கள ஆய்வில் ஈடுபட்டபோது, அம்மக்கள் கூறிய கருத்துக்கள் மேலும் வேதனையை கூட்டுவதாக அமைந்தன. குறிப்பிட்ட சில இடங்களில் அவ்வூர் கிராமசேவையாளர்களே பொருள்கள் வெளியேறுவதற்கான அனுமதியை முன்னின்று வழங்கி வருவதாகவும், இன்னும் ஏராளமான வீடுகளில் தென்னிலங்கைக்குப் பொருள்ககளை நகர்த்துவதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும் கூறினார்கள். அறிவுரை கூறவேண்டிய புத்திஜீவிகளே இவ்வாறு அறிவற்ற முறையில் செயலாற்றுவது மிகவும் தேசத்துரோகமான செயலாகும்.


சங்கானையில் நடந்த கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட அரும்பொருள்கள்

ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா? - என்பதுபோல குறித்த பணியாளர்களது வேலைகள் ஆரம்ப

(10ஆம் பக்கம் பார்க்க)


கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட விக்கிரகங்கள், பழைய பாத்திரங்கள், மாங்களப் பொருள்கள்.

# போட்டிகளும் பரிசுகளும் விருதுகளும்....!

நாங்கள் போட்டிகளும் பொறாமைகளும் பரிசுகளும் விருதுகளும் நிறைந்த உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். பாடசாலை வாழ்க்கையுடன் தொடங்கும் போட்டிகள், மனிதன் இறக்கும்வரை நீடிக்கின்றன.

தமிழ்த்தினப்போட்டிகளையே எடுத்துக்கொள்வோம். பாடசாலை மட்டத்தில் தொடங்கி, கொழும்பு செல்லும்வரை எத்தனை போட்டிகள். இந்தப் போட்டிகளுக்காக மாணவர்களைக் கசக்கிப் பிழிந்துவிடுவார்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்களும் பாவம் களைத்துப்போவார்கள்! போட்டி முடிவுகள் வெளியிடப்படும் பொழுது முணுமுணுப்புகள் நிறையக்கேட்கும். சில வேளைகளில் முணுமுணுப்புகள் முறைப்பாடுகளாக மாறும். போட்டி முடிவுகள் பற்றிய கண்டனக் கடிதங்களைப் பத்திரிகைகளிலும் வாசிக்கலாம்.

இருந்தாலும் அடுத்த ஆண்டும் அதே போட்டிகளை அதேமுறையில் நடத்துகிறோம். மாணவர்களும் பங்குபற்றுகிறார்கள். என்ன செய்வது. எங்களுடைய வாழ்க்கையே போட்டிமயமாகிவிட்டதே! அதிலிருந்து தப்பமுடியாது.

விளையாட்டுப்போட்டிகள், பந்தடிகள் பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை. சிநேகபூர்வப் பந்தடிப் போட்டிகள், அடிதடிகளில் முடிவதும் உண்டு. சிலவேளைகளில் மத்தியஸ்தர்களுக்கும் அவை தாராளமாகக் கொடுக்கப்படும்!

பெரியவர்களது உலகத்தில்தான் பெரும்பெரும் போட்டிகள்! முதலில் உத்தியோகம் பெறுவதற்குப் போட்டி. பிறகு பதவியுயர்வுக்குப் போட்டி. பிறவு செல்வாக்குப் போட்டி. அதன் பிறகு சேவை நீடிப்புப் போட்டி. சேவை முடிந்தால் பதவிகளுக்குப் போட்டி..!

எல்லாப் போட்டிகள் பற்றி எழுதினால் வாசகர்களுக்குத் தலை சுற்றும். எனவே, வாசகர் நலனைக் கருத்திற்கொண்டு எனக்கு நன்கு தெரிந்த இலக்கிய உலகப் போட்டிகளைப் பற்றி மட்டும் சுருக்கமாக எழுதுகிறேன்.

இன்று எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசுகளும் விருதுகளும் வழங்கப் பல கழகங்களும் நிறுவனங்களும் உள்ளன. அரசாங்கங்களும் அவற்றை வழங்குகின்றன. இந்தப் பரிசுகளும் விருதுகளும் வழங்கப்படாத பழங்காலத்தில்தானே சிறந்த இலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. கம்பனுக்கும் வள்ளுவனுக்கும் இளங்கோவுக்கும் யார் சாகித்திய மண்டலப் பரிசு கொடுத்தார்கள்? ஷேக்ஸ்பியருக்கும் மொலியருக்கும் டில்டனுக்கும் ஷெல்லிக்கும் சாகித்தியப் பரிசா கொடுத்தார்கள்?

'எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் அவர்கள் வாழுகின்ற காலத்திலேயே கௌரவிக்கவேண்டும். அவர்களை ஊக்கப்படுத்தவேண்டும்' என்பதுதான் அரசாங்கங்கள் பரிசுகளும் விருதுகளும் வழங்குவதற்கான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. அந்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா?




இந்திய சாகித்திய பரிசுகள், விருதுகள் பற்றியே கண்டனங்கள் நிறை எழுதப்பட்டுள்ளன. இலங்கை சாகித்தியப் பரிசுகள் பற்றி ஏன் பேசுவான்? பல ஓட்டைகள்! என்னைப்பறி மட்டும் கொஞ்சம் சொல்கிறேன்.

அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளை

நான் 1954ஆம் ஆண்டிலிருந்து நாடகத் துறையில் உழைத்துவருகிறேன். 1980ஆம் ஆண்டிலிருந்து இலங்கை வானொலி ஊடாக, இலங்கையர் எல்லோருக்கும் நாடக விருந்து அளித்து வருகிறேன். வானொலி நாடக நூல்கள் உட்பட பல நாடக நூல்கள் வெளியிட்டேன். இலங்கை அரசாங்கத்தின் சாகித்தியப் பரிசு அவற்றில் ஒன்றிற்குக்கூட வழங்கப்படவில்லை!.

சாகித்தியப் பரிசு என்ன? ஒரு சிலரது தீர்மானம். அவர்கள் எல்லாம் அறிந்தவர்களுமல்ல; முற்றும் துறந்த முனிவர்களுமல்ல. அவர்களும் விருப்பு வெறுப்புகளும் ஆசாபாசங்களும் கொண்ட மனிதர்களே!

நான் அரசாங்கம் பரிசுகளும் விருதுகளும் வழங்கக் கூடாது என்று சொல்லவில்லை. அவற்றை நேர்மையாக வழங்காவிட்டால், அவற்றை வழங்குவதில் உள்ள நோக்கம் நிறைவேறாது!

பரிசுகளில் பெரிய பரிசு நோபல் பரிசு. அவற்றை வழங்குவதிலேயே இமாலயத் தவறுகள் விடப்பட்டிருக்கின்றன. உலகின் தலைசிறந்த நாவலாசிரியராகக் கருதப்படும் லியோடால்ஸ்டாய்க்கு நோபல் பரிசு வழங்கப்படவில்லை அன்ரன் செக்காவிற்கும் மக்ஸிம் கோர்க்கிற்கும் கூட வழங்கப்படவில்லை. ஷேக்ஸ்பியருக்குப் பின்பு உலக நாடகவானில் தோன்றிய மாபெரும் மேதை கென்றிக் இப்சனுக்கும் நோபல் பரிசு வழங்கப்படவில்லை!

எனது ஐம்பது வருட இலக்கிய உலக வாழ்க்கையில் இருந்து எழுத்தாளர்களுக்கும் மாணவர்களுக்கும் நான் சொல்லும் அறிவுரைகளும் இதுதான். பரிசுகளும் விருதுகளும் வழங்கப்படவில்லை என்று கவலைப்படாதீர்கள். அவை கிடைத்துவிட்டனவே என்றும் நலைகால் தெரியாமல் துள்ளிக்குதிக்காதீர்கள்! அமைதியாக இலக்கியப்பணி புரியுங்கள். சாதனைகள் செய்வீர்கள். நீங்கள் செய்வது தான் உங்களது சாதனை! எழுத்தாற்றல் இறைவன் எங்களுக்குத் தந்த விஷேட திறமை. அதை உலக நன்மைக்காகப் பயன்படுத்தவேண்டியது எங்களது கடமை! ✪

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

MD 90 Model 20 (23000 கி.மீ. ஓடியது), LML 125 CC (15000 கி.மீ. ஓடியது) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு 49, சட்டநாதர் கோயில் வீதி, யாழ்ப்பாணம் (இளங்கலைஞர் மன்றம் (முன்பாக). (12346)

நல்ல நிலையிலுள்ள C-90 டிலுக்ஸ் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. 109, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (12397)

வளர்ப்பு கல்மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், Air Pump என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12339)

Broilers, சேவல், கல்பேட்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து தரப்படும். தொடர்பு: சே.கிருஸ்ணகுமார், விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய் (பிப்பிலி சந்திக்கு முன்பாக). (12304)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம (Electronic நிறுவை). தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11714)

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன வேண்டிய நிறைகளில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். விலை குறைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி (மிலேனியம் ரெக்ஸ்ரோறன்ருக்கு முன்பாக). (12360)

சம்பியன் லேன், கொக்குவிலில் பழைய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.No:- 074-214299 (12016)

ஸ்ரான்லி வீதி, புகையிரதக் கடவைக்கு அருகில் கடை விற்பனைக்கு உண்டு. தொடர்பு முகவரி: தி.சண்முகலிங்கம், 39/5, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (12386)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

காவலுக்குரிய, அழகான Pedigreed Great Dane (Cross), Pedigreed Dobermann Pincher நாய்க் குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. தொடர்பு: தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12349)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள 35/= அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 26.12.2002 வியாழக் கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரை சந்தையடி, நல்லூர். (11768)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும், 1970ஆம் ஆண்டு பிறந்த, அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர் பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விளம்பர இல. 1736, C/o உதயன். (12287)

## வீடு வாடகைக்கு தேவை

சாவகச்சேரி, சங்கத்தானை, சாரதா வீதி, கச்சாய் சுற்று வட்டாரப் பகுதிகளில் பாதுகாப்பான, சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1725, C/o உதயன், யாழ்ப்பாணம். (12238)

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு யாழ்நகரப் பகுதியில் 4 கி.மீ. சுற்று வட்டாரத்தில் வீடு வாடகைக்குத் தேவை. முற்பணமும் வாடகையும் தரப்படும். தொடர்பு: தொலைபேசி: 222 2054. (12374)

## தவறிவிட்டது

கந்தையா விக்கினேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.602560511V), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கோப்பாய்ச் சந்திக்கும் கச்சேரிக்கும் இடையே தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். க.விக்கினேஸ்வரன், நாவற்கட்டை, கோப்பாய் வடக்கு. (12410)

## இலவச மருத்துவ முகாம்

வலி.தெற்கு,டிசெ.29

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை சுதுமலை சிநமய பாரதி வித்தியாலய ஆரம்பபிரிவு மண்டபத்தில் இலவச மருத்துவ, கண்பார்வை பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மருத்துவபீட பீடாதிபதி லயன் வைத்திய கலாநிதி இராஜேந்திரப் பிரசாத், யாழ்.போதனா வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய அதிகாரி லயன் வைத்திய கலாநிதி கே.இரத்தினசிங்கம் ஆகியோருடன் எஸ்.எம்.பெர்னாண்டோ ஸ்தாபனத்தார் இணைந்து வைத்திய, கண்பரிசோதனைகளை மேற்கொள்வர்.

வசதி குறைந்த நோயாளர்களுக்கு மூக்கு கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படும். நீரிழிவு பரிசோதனைகளும் நடைபெறும். (ஐ-152)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.29

ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும். (ம)

## மீண்டும் பனங்கூழ் விற்பனை

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்.கச்சேரியடியிலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகம் முன்பாக வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் மேற்கொண்டு வந்த மறியல் போராட்டத்தின் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த பனங்கூழ் விற்பனை நேற்று மீண்டும் ஆரம்பமாகியது.

வாரத்தில் சனி, ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் பனங்கூழ் விற்பனைசெய்யப்பட்டு வருகிறது. (ஐ-10)

## அரும்பொருள்.....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகும்வரை இப்பொருள்கள் பாதுகாக்கப்படுமா? என்பதுதான் தற்போதைய கேள்வி. ஏற்கனவே ஏராளமானவற்றை நாம் இழந்துவிட்டோம். இருப்பதையாவது நாம் பாதுகாக்கவேண்டுமல்லவா? முழுமூச்சோடு களத்தில் இறங்கினால் தான் எம் இலக்கை நாம் அடைய முடியும்.

☆ அரும்பொருள் தொடர்பான வேலைத் திட்டங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களின் - கீழ் மிகத் துரிதகதியில் முன்னெடுக்கப்படவேண்டும்.

☆ இதனால் அந்தந்தப் பிரதேசத திற்குரிய வரலாறு என்பது குறிப்பிட்ட பிரதேச செயலகங்களுக்குக் கீழேயே கொண்டுவரக்கூடியதாக அமையும்.

☆ மக்களிடையே இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஆர்வத்தை அதிகரிக்கவும் சில வழிமுறைகளைக் கையாளலாம்.

☆ கிராம சேவையாளர்கள் மிக விழிப்போடு செயலாற்றிப் பூரண ஒத்துழைப்பினை இப்பணியில் ஈடுபடுவோர்க்கு வழங்கவேண்டும்.

☆ இவை எல்லாவற்றுக்கும் மேலாக இப்பொருள்களை பாதுகாக்க, ஆவணப்படுத்த 'அரும்பொருளகம்' ஒன்றை மிக விரைவில் நாம் உருவாக்கவேண்டும். ★


## விற்பனைக்குண்டு

பொலிகண்டியில் 28 அடி வள்ளம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

சுப்பிரமணியம் பரியாரியார்

பொலிகண்டி, ஆலடி. (12366)



# உளமார வாழ்த்துகின்றோம்



## திரு.வல்லிபுரம் நடராசா

*(B.A. HONS. Dip. in Edu., M.Ed., S.L.P.S. 2:I)*

யா/வரணி மகா வித்தியாலய வரலாற்றில் சிறந்த பொருளியல் ஆசிரியராகச் செயலாற்றியவரும் தற்போது யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஆசிரியரும் அண்மையில் *கல்வி முதுமாணிப் பட்டம்* பெற்றவருமாகிய வல்லிபுரம் நடராசா அவர்கள் அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் தெரிவான மிகச் சிலரில் ஒருவராக அதிபர் சேவை 2:I பதவியுயர்வு பெற்றமையிட்டு இன்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது 39ஆவது பிறந்த நாளில் அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் கல்விப் பணியில் பதவியுயர்வுகள் பல பெற்று அவரது எதிர்காலம் சிறந்து மேன்மை பெறவும் உளமார வாழ்த்துகின்றோம்.

வரணி. (12409) **அன்புள்ள ஆசிரிய சகோதரத்துவம்.**



# துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவன ஆசிரியை

திருமதி B.செல்வராணி அவர்களின்

அன்புத் தந்தையார்

## ஆசைப்பிள்ளை யாக்கோப்பு

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*The Express Institute*
Irupalai,, Kopay.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆளணியினர். (சி-25728)



# இந்திய பரம்பரை ஜோதிடர்





மதுரை ஜோதிட மங்கை

அருள்வாக்கு

**அம்பிகா அம்மா** அவர்கள்

பல வெளிநாடுகளுக்கும் சென்று ஜோதிடம் கூறி புகழ்பெற்றவர். இப்பொழுது யாழ்.மாநகரில் **கைரேகை, ஜாதகம்** பார்த்து பலன் கூறுவதில் புகழ் பெற்றவர்.

நீங்களும் ஒருமுறை அம்மாவை நேரில் சந்தித்து, உங்கள் குறைகளை நீக்கி எல்லாவிதமான நன்மைகளையும் அடைய இன்றே அருள்வாக்கு அம்பிகாவைச் சந்திக்கவும்.

*சந்திக்கும் இடம்:* **அருள்வாக்கு அம்பிகா அம்மா,**
மடோனா லொட்ஜ்
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் அருகில்/லிங்கன் கிறீம் ஹவுஸ் அருகில்)
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (12169)



**யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!**

பல மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்நகரில் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

# City & Guilds London U.K.

May/June Examination 2003

Diploma & Advanced Diploma in

## Telecommunications & Electronics Engineering

பரீட்சையில் சித்தி எய்துவோருக்கு London University களில் 2ஆம் வருட அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும். பரீட்சைகள் British Councilலினால் நடத்தப்படும்.

உங்கள் அனுமதிகளை 10.01.2003 வரை பெற்றுக்கொள்ளலாம்.

**Commencing on 18.01.2003**

| HEAD OFFICE | BRANCH |
| --- | --- |
| APSS International | VICKNAA TUITION CENTRE |
| 57, E.S.FERNANDO MW, | No: 52, STANTLY ROAD, |
| COLOMBO - 6 | JAFFNA. |
| T.P.: 362547 | T.P.: 0777-662033 |

(12364)



# கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்

செல்வன் இரகுலேசன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி செல்லமுத்து தம்பு

அவர்கள் 26.12.2002 அன்று இயற்கையெய்தியமையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

- ஆசிரிய சகோதரத்துவம். (12403)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமசாமி கண்மணி

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி இராமசாமி கண்மணி அவர்கள் நேற்று (27.12.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசுவாமித்திரர் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, செல்லத்தங்கம், சிவக்கொழுந்து, கிருஷ்ணபிள்ளை மற்றும் நாயகப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான மேனகையம்மா, கந்தையா, சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி, பொன்னம்மா, மங்கையர்க்கரசி (சுவிஸ்), சோமசுந்தரம் (பரிஸ் ரெக்ஸ்), பாலசிங்கம் (பரிஸ் மாட்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பொன்னையா மற்றும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், இராசலிங்கம் மற்றும் தர்மபூபதி, சௌந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ம.ரஜனி (கொழும்பு), சந்திரிக்கா (ஜேர்மனி), சுரேஸ்குமார் (ஜேர்மனி), கிருபகுமார் (ஜேர்மனி), உதயகுமார் (சுவிஸ்), நசிகலா (பிரான்ஸ்), பிரதீபன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), பிரேம்நாத் (லண்டன்), பிரபாளினி, ராஸ்மி, மேகரன் (லண்டன்), தயாகரன் (நெதர்லாந்து), நந்தகரன், கஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இல.105, அரசடி வீதி (பிறவுண் றோட் சந்தி) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*105, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12395)

தகவல்:
இ.சோமசுந்தரம் (மகன்)
(பரிஸ் ரெக்ஸ்)

## திருமதி இராமையா திருமலர்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் தொண்டமனாறு, ஆவரங்காலை வசிப்பிடமாகக கொண்டவரும் காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் V.A.இராமையா அவர்களின் அன்பு மனைவியுமான இராமையா திருமலர் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10ஆம் கட்டை,*
*ஆவரங்கால்.* (12395)

தகவல்:
பிள்ளைகள்.

# நூல் வரிசை



நூல் : 'முதுசொமாக...'
(சிறுகதை தொகுதி)
ஆசிரியர் : வதிரி இ. இராஜேஸ்கண்ணன்
வெளியீடு: தூண்டி

இந்த இளைஞனின் எழுத்துக்கள் எனக்குப் பரீட்சயமானவை. சஞ்சீவியில் வெளிவந்த இவரின் பெரும்பாலான கதைகளை நான் ஏற்கனவே படித்திருக்கின்றேன். அக்கதைகளும், வேறுசில கதைகளும் சேர்ந்து இப்போது "முதுசொமாக...." என்ற நூலுருவாக....

இராஜேஸ்கண்ணன்..... அவருக்கே உரித்தான 'பாணியில்', அவரைப்பாதித்த விடயங்களை எழுதுகின்றார். பிசுறுகளில்லாத இயல்பான மொழிநடை யாழ்ப்பாணத்து பேச்சுவழக்குச் சொற்களைப் பொருத்தமான இடங்களில் கையாள்கின்றார். 'இளமை உதிர்ந்து போகும் நேரம்', 'முற்றமெல்லாம் பால்வார்க்கும் நிலாவொளி'; 'காற்றுக்கூடகாதைப் பொத்திக்கொண்டது' என்றெல்லாம் இடையிடையே கவிதை தோய்ந்துவரும் வரிகள்....

சகமனிதன், சக உயிர்கள் மீது இவர் கொண்ட பரிவே இவரின் கதைகளின் ஆதார சுருதி. இதுவே இவர் கதைகளின் மிகப் பெரிய பலம். இதுவே இவரை இவரது எதிர்கால உன்னதங்களுக்குக் கட்டியம் கூறும்.........

*கும்பிளான் ஐ. சண்முகன்*



'ஆத்மா சஞ்சிகை'
வெளியீடு: மனிதம் கலந்தாய்வுக் குழு

**யாழ்.**மடம் வீதியில் 1/7 ஆம் இலக்கத்தில் இயங்கும் மனிதம் கலந்தாய்வுக் குழுவினரால் வெளியிடப்பட்டு வந்த 'ஆத்மா' சஞ்சிகை சிறிதுகால இடைவெளிக்குப் பின் மீண்டும் வெளிவரத் தொடங்கியிருக்கிறது.

'மனிதத்தின் இருப்பைத் தேடி' என்ற மகுட வாக்கியதுடன் அச்சிடப்படும் இந்த சஞ்சிகையின் நவம்பர் - டிசெம்பர் இதழில் 'பொதுப்புத்தி அவமதிக்கப்படுவதை உணரமுடியாத பார்வையாளர்' என்ற தலைப்பில் திரைப்படம் தொடர்பான - எழுத்தாளர் அ.யேசுராசாவின் - செவ்வியும் மற்றும் பல அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.



'திசை'
கையெழுத்துச் சஞ்சிகை
ஆசிரியர்: கு.தனேஸ்வரன்

'திசை' என்று பெயரிட்டு கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றை வடிவமைத்து நண்பர்கள் வட்டத்துக்குள் வலம்வர விட்டிருக்கிறார் கு.தனேஸ்வரன்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவரான இவர் ஆண்டுக்கு ஒன்றாக இதுவரை நான்கு இதழ்களை முழுக்க முழுக்க தனது கைவண்ணத்தில் அழகுறத் தொகுத்துள்ளார். பார்வைக்கு அச்சுப்பதிப்பு போன்று தெரியும் கையெழுத்து படிப்போரை வியக்க வைக்கிறது. நவீன அறிவியல் தகவல்கள் உட்பட பல்சுவை அம்சங்களைத் தாங்கி வருகிறது 'திசை'. விரைவில் அச்சுப்பதிப்பில் வெளியிட ஆர்வமாய் இருக்கிறார் அதன் ஆசிரியர். தொடர்புகளுக்கு: 101, சட்டநாதர் வீதி, நல்லூர்.




நூல் : 'வியாகுல அன்னைவெண்பா'
ஆசிரியர் : மு.சிங்கராயர்
வெளியீடு: 'தமிழ்மதி' யாழ்ப்பாணம்.

**வெ**ண்பாவில் எழுந்த பழந் தமிழ்ப் படைப்புக்களிற் பல, அறம், பொருள், இன்பம்,வீடு என்னும் உறுதிப் பொருள்களைப் போதிக்கும் நூல்களாய் உள்ளன. ஆனால், பாவலர் சிங்கராயரின் பிரதான நோக்கம் நீதி போதனை அல்ல. அவருடைய அக்கறை, தம் வழிபடு தெய்வமாகிய அன்னை மரியாளைப் போற்றி வணங்கி, அன்பு கலந்து உருகுவதாகும்.

துன்ப துயரங்களிலே தோய்ந்து வருந்திப் பதைக்கும் மனித குலம் அந்தத் துன்பப் பிடியிலிருந்து மீட்சி பெற வேண்டும் என்ற பரந்த குறிக்கோளின் அடையாளமாக விளங்கும் ஒரு தெய்வத் தாயையும் தெய்வத் திருமகனையும் மனமாரப் பாடவேண்டும் என்னும் உந்தலே, பாவலர் சிங்கராயரை இந்த உயரிய பணியிலே ஊக்கியுள்ளது. அந்த அன்பூக்கத்தினால், தூண்டப்பட்ட ஒருவர், தமிழ்ப்பா வடிவங்களுள் மிகவும் செப்பமான பண்பட்ட வெண்பா யாப்பில் இந்தப் பிரபந்தத்தினை இயற்ற முனைந்தது இயல்பே ஆகும். அவருடைய நன்முயற்சியின் பேறாகக் கிடைத்த இந்தத் தோத்திரப் பாமாலை, இறையருள் நாடும் இதயம் படைத்தவர் பலரை ஈர்த்துப் பரவசத்தில் ஆழ்த்தும்.

*இ. முருகையன்*



நூல் : 'தடம்'
வெளியீடு: கலை, கலாசார மன்றம், வவுனியா வளாகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

'தடம்' (சுவடு -3- 2002) வெளிவந்திருக்கிறது. யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக கலை கலாசார மன்றத்தின் வெளியீடான இந்த அரிய தொகுப்பில் இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், அரங்க எழுத்துருக்கள் என்ற நான்கு பிரிவுகளில் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. 145 பக்கங்கள் கொண்ட இந்த தொகுப்பு நூல் பல்கலைக்கழக மாணவர்களிடையே கலை, இலக்கிய விழிப்புணர்வையும் அதனூடாக சமூகப் பிரக்ஞையையும் ஏற்படுத்த முயன்று வருகிறது...



நூல் : 'களத்திலேயே வீழ்வோம்'
(மொழிபெயர்க்க கவிதைத் தொகுப்பு)
வெளியீடு: குழல் வெளியீட்டகம் - புதுக்குடியிருப்பு.

**பு**துக்குடியிருப்பில் செயற்படும் 'குழல்' வெளியீட்டகம் 'களத்திலே வீழ்வோம்' என்ற பெயரில் மொழிபெயர்த்த கவிதைகள் தொகுப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறது. நெருக்குவாரங்கள் மிகுந்த வன்னி களத்திலிருந்து வந்திருக்கின்ற அச்சுருவாக்கங்களில் இதுவும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒன்று.

உலகில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த கவிஞர்களின் கவிதைகளை மொழிபெயர்த்து நூலுருவாக்கி வெளியிட்டிருக்கிறது குழல் வெளியீட்டகம். ஆங்கிலத்துக்கு ஈடாக அல்லது அதற்கு அடுத்த படியாக இன்றைய உலகில் நிமிர்ந்து நிற்கும் பிரெஞ்சு, ஜேர்மன், ஜப்பான், சீனம் ஆகிய மொழிகளில் வெளிவந்த அரிய கவிதைகள் இத்தொகுப்பு மூலம் அறிமுகமாகின்றன.

# இந்த நாட்டில் இருந்து வந்த சவப்பெட்டிக் கலாசாரம் ரணில் ஆட்சியில் ஒழிந்தது

## ஊடகவியலாளர்களுக்குப் பூரண சுதந்திரம் - அமைச்சர் இம்தியாஸ்

கொழும்பு,டிசெ.29

இந்த நாட்டில் இருந்து வந்த சவப்பெட்டி கலாசாரம் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் ஒழிந்துவிட்டது. ஊடகவியலாளர்கள் பூரண சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எவருக்கும் அஞ்சாமல் உண்மையை எழுதலாம். அதற்கான சட்டப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மேற்கண்டவாறு ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், நேற்று அம்பாறை செயலகத்தில் ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கத் தகவல் திணைக்கள அடையாள அட்டைகளை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் 4,000 ஊடகவியலாளர்கள் உள்ளனர். இதுவரை 3,000 பேருக்கு அரசாங்கத் தகவல் திணைகள அடையாள அட்டைகளை வழங்கியுள்ளோம். கடந்த 6 வருடங்களாக ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்து வந்த போதிலும் அது எமது ஐக்கிய தேசிய முன்னணி அரசில்தான் நிறைவேறுகிறது.

ஊடகவியலாளர்கள் கடந்த காலத்தில் பல வசதியீனங்களை அனுபவித்து வந்தனர்.

நாம் அரசாங்கத்தைப் பொறுப் பேற்றதும் சுதந்திர ஊடகத்துறையை உருவாக்கினோம். குற்றவியல் சட்டக் கோவையில் ஊடகவியலாளருக்கு தண்டனை வழங்கும் பிரிவை நீக்கினோம்.

எதிர்வரும் ஜனவரி 24ஆம் திகதி சுதந்திர ஊடகவியலாளர்கள் சாசனத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற இருக்கின்றோம். அந்த சாசனப்படி எங்கிருந்து செய்தி கிடைத்தது என்று யாரும் கேட்கமுடியாத சுதந்திரம் ஊடகவியலாளருக்கு வழங்கப்படுகின்றது.

பத்திரிகையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தொடர முடியாது. செய்திகள் தொடர்பாக விசாரிக்கும் பத்திரிகை கவுன்ஸிலில் இனிமேல் அரச அதிகாரிகள் இருக்க மாட்டார்கள் பத்திரிகையாளர்களே இருப்பர்.

பத்திரிகையாளர்களை பத்திரிகையாளர்களே விசாரிக்கும் நிலை உருவாகும்.

ஊடகவியலாளர்களுக்கு மற்றும் பல வசதிகளையும் செய்துகொடுக்க பிரதமர் ரணில் முன் வந்திருக்கிறார்.

ரணிலின் துணிச்சலான சமாதான முயற்சியால் நாட்டில் சமாதானம் நிலவுகிறது; நாட்டில் அமைதி நிலவுகிறது; சவப்பெட்டி கலாசாரம் இல்லை.

சமாதானம் வருமென்று எல்லோரும் நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கை வீண் போகாமல் இருக்க ஊடகவியலாளர்கள் தமது பங்களிப்பைச் சரிவரச் செய்யவேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

அம்பாறை மாவட்ட எம்.பி. அ.சந்திரநேரு பேசுகையில், - "பத்திரிகையாளர்கள் மக்கள் சேவையாளர்களாவர். அவர்கள் உண்மையாக, நேர்மையாக எழுத வேண்டும். காஞ்சிரங்குடா சம்பவத்தை தென்னிலங்கை பத்திரிகைகள் சில, புலிகளோடு சிண்டு முடிநததை மறுக்க முடியாது.

புலிகள் 1,000 பேர் வந்து படையினரைத் தாக்கினர் என்று சிங்களப் பத்திரிகையாளர்கள் குறிப்பிட்டு இனவாதம் தூவினர் - என்றார்.

அமைச்சர் பி.தயாரத்ன, செயலாளர் குமார் அபேசிங்க ஆகியோரும் பேசினர். தகவல் திணைக்கள பணிப்பாளர் பேர்ட்டி ஜயசேகரவும் வைபவத்தில் கலந்துகொண்டு அடையாள அட்டைகளை ஊடகவியலாளர்களுக்கு வழங்கினார். (ஐ)

# சமாதானப் பேச்சில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் அங்கீகரிக்கப்படவேண்டும்

## பிரதமருக்கு அமைச்சர் ஹக்கீம் காரசாரமான கடிதம்

கொழும்பு,டிசெ.29

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உட்கட்சி நெருக்கடி இன்னும் தீராத நிலையில், ஓர் அணிக்குத் தலைமை தாங்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் காரசாரமான கடிதம் ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பியிருக்கிறார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதான பேச்சுக்களில் ஒரு தனித் தரப்பாக முஸ்லிம் சமூகத்துக்கு சமத்துவமான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் அக்கடிதத்தில் கோரியிருக்கின்றார்.

கடந்த புதன் இரவு இக்கடிதம் பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தற்பொழுது சிங்கப்பூர் - ஹொங்கொங் விஜயத்தை பிரதமர் மேற்கொண்டிருக்கிறார்.

விடுதலைப்புலிகளுடன் நடை பெறும் பேச்சுக்களில் முஸ்லிம் சமூகம் தனது தலைமையில் சுயாதீனமாகப் பங்குபற்றும் என்ற பகிரங்க உறுதிமொழியை பிரதமர் வழங்க வேண்டும் என்று ரவூப் ஹக்கீம் தனது கடிதத்தில் கோரியிருக்கிறார்.

இந்த உறுதி மொழியை வழங்குவதில் ஏற்படும் தாமதம், சமாதான செயற்பாடுகளின் மீது முஸ்லிம் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை குறைக்கச் செய்யும் எனவும், முஸ்லிம் சமூகத்திலுள்ள சமாதான எதிர்ப்பு சக்திகள் மக்களைத்தவறாக வழிநடத்த வழிவகுக்கும் எனவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குச் சாத்தியமான தீர்வான சமஷ்டி அமைப்பு - முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்து எதுவும் குறிப்பிடப்படாமலேயே இணங்கப்பட்டிருக்கிறது. அப்பிராந்தியத்தில் அதிகாரப் பகிர்வு குறித்த விடயம் புறக்கணிக்கப்பட்டிருப்பது ஒரு முக்கிய அம்சமாகும்

உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகள் பற்றிய உப குழுவில் சமபலமான பிரதிநிதித் துவத்தை முஸ்லிம்கள் பெறத் தவறிவிட்டனர். முஸ்லிம்களின் நலன்கள் தொடர்பான முக்கிய விடயங்களில் தீர்மானம் மேற்கொள்ளும் பணியில் முஸ்லிம்களை ஒதுக்கி வைப்பதற்கான விடுதலைப் புலிகளின் விஷமத்தனமான நோக்கத்தின விளைவே இதுவாகும்.

மாவட்ட மட்டத்தில், உபகுழுக்கள் மட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கு நிலவும் சமமற்ற தன்மையை சுயாதீனமான முஸ்லிம் பிரதிநிதித்துவம் சீர்படுத்திவிடும்

-இவ்வாறு அக்கடிதத்தில் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டிருக்கிறார். (ஒ)

# நீர்கொழும்பு கடலில் காணாமற்போன ஐந்து வெளிநாட்டவர்களும் மீட்பு

கொழும்பு,டிசெ.29

நீர்கொழும்புக் கடலில் காணாமற்போனதாகக் கூறப்பட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த ஐந்து சுழியோடிகளும் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டனர். மேற்குக் கரையோரத்தில் இருந்து இருபது கடல் மைல்களுக்கு அப்பால் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களினால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

இந்த ஐந்து சுழியோடிகளும் இலங்கையர் ஒருவருக்குச் சொந்தமான படகு ஒன்றில் சுழியோடுவதற் காகச் சென்றிருந்தனர்.

இவர்கள் கரையிலிருந்து எட்டுக் கடல் மைல்களுக்கு அப்பால் சுழியோடும்போது திடீரெனக் காணாமல் போயினர்.

இவர்களைத் தேடுவதற்காகச் சென்ற படகோட்டிகள், சில மணித்தியாலங்களின் பின்னர் சுழியோடிகளை மீட்கமுடியாது போனதால் கரைக்குத் திரும்பினார்கள்.

நீர்கொழும்பு சேத்துகால என்னும் பகுதியில் முருகைக்கற்பாறைகளைப் பார்வையிடுவதற்காக இவர்கள் சுழியோடச் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெளிநாட்டவர்கள் சுழியோடும் நிறுவனம் ஒன்றின் ஆலோசகர்களாகவும், பயிற்றுவிப்பாளர்களாகவும் பணிபுரிகின்றனர். இவர்களுள் இருவர் பெண்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## வாழ்த்துகின்றோம்

150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எமது கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

K.விநாயகலிங்கம்
தலைவர்.

S.K.தங்கவடிவேல்,
ஜோசப்தாவீது
செயலாளர்கள்.

பாராட்டுக் குழு
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(12377)



## இறக்குமதி முகாமையாளர் தேவை
### (IMPORT MANAGAR)

கொழும்பில் உள்ள தொழில் ஸ்தாபனத்திற்கு இறக்குமதி முகாமையாளர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

**விள.இல. 1738, மே/பா உதயன்.**

(12405)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.G.T.ஞானசேகரவேல்
*(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

அகில இலங்கை சமாதான நீதிவானாகக் கடந்த செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட திரு. G.T.ஞானசேகரவேல் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் இன்னும் பல பதவிகளைப் பெற்று மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவாளர்கள்
வலி.கிழக்கு.

(C-25729)



புதிய ஜனநாயகக் கட்சியின்

## பகிரங்க கருத்தரங்கு

"சமாதான முன்னெடுப்புகளும்,
எதிர்நோக்கும் சவால்களும்"

நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் (APK)
பிரதிநிதி
ரூனா மரியா பிபரிக் அவர்கள்
முக்கிய உரையாற்றுவார்.
மற்றும்
சி.கா.செந்திவேல், சோ.தேவராஜா
ஆகியோரும் உரை நிகழ்த்துவர்.

*தலைமை*
சட்டத்தரணி இ.தம்பையா
*(தேசிய அமைப்பாளர், புதிய ஜனநாயகக் கட்சி)*

இடம் : யாழ் "சிற்றி ஹோல்" மண்டபம்
*(வின்சர் சந்திக்கு அருகில்)*
காலம் : இன்று (29.12.2002) ஞாயிறு பி.ப. 4 மணி.

அனைவரும் வருக!

(12418) புதிய ஜனநாயகக் கட்சி, வட.பிரதேசம்.



## இவரைக் காணவில்லை



இல.32, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

### விஜயகுமார் றெஜினோல்ட்

என்பவரை 09.12.2002 முதலாகக் காணவில்லை. 41/2 அடி உயரமும், மாநிறமுமுள்ளவர் (பொது நிறம்). தலைமுடி கட்டையாக வெட்டியும் உள்ளார்.

இவரைக் கண்டவர்கள் மேற்காணும் முகவரிக்கு அறியத்தரவும்.

- ஆ.விஜயகுமார்

(12407)



## யா/இடைக்காடு மகாவித்தியாலயம்
### தரம் - 6 ஆங்கில மொழிமூல வகுப்புக்கான
## அனுமதி - 2003

தேசிய நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் எமது பாடசாலையில் 2003 ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ள தரம் 6 ஆங்கில மொழிமூல வகுப்பில் சேர்வதற்குத் தகுதியான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உடன் விண்ணப்பிக்கவும்.

யா/இடைக்காடு மகாவித்தியாலயம்,
அச்சுவேலி.
-அதிபர்.

(12404)


## இரவுநேரம் சிகிச்சை பெற மக்கள் சிரமம்

கொடிகாமம்,டிசெ.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் இரவு வேளையில் அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் எதுவும் இயங்காததினால் அப்பிரதேச மக்கள் பெரும சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தென்மராட்சியின் பெரும்பாலான பகுதிகளில் மக்கள் மீள் குடியமர்ந்துள்ளனர். சாவகச்சேரி வைத்தியசாலை, மிருசுவில் வைத்தியசாலை, வரணி வைத்தியசாலைகளில் பகல் நேரத்தில் மட்டுமே வெளிநோயாளர் பிரிவுகள் இயங்குகின்றன.

இதேவேளை, தனியார் மருத்துவ நிலையங்களும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரையுமே இயங்குகின்றன. இந்த நிலையில் மக்கள் இரவு வேளைகளில் சுகவீனமுற்றால், சிகிச்சை பெறுவதற்காக வைத்தியர்களைத் தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது. இக்கஷ்டங்களின் மத்தியிலும் தனியார் மருத்துவநிலைய டாக்டர்களின் வீடுகளுக்குச் செல்லும்போது ஒருசில டாக்டர் தாம் பகல் நேரத்தில் மட்டுமே சிகிச்சை வழங்குவதாகவும் - நோயாளியை வேறு இடத்துக்கு கொண்டு செல்லுமாறும் - திருப்பியனுப்புகின்றனர். இதனால், நோயாளிகள் இரவுவேளையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வாடகைக் கார்கள், ஓட்டோக்களில் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து சொத்துக்களை இழந்து பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில் தென மராட்சி மக்கள் மருத்துவ வசதியைப பெற பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, தென்மராட்சி அரச வைத்தியசாலைகள் வார்ட்டுக்களைத் திறந்து இரவு நேரத்திலும் மருத்துவமனைகள் இயங்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-74)

## வடமராட்சி ஆசிரியருக்கான கைத்தரங்கணிப்பு

செம்பியன்பற்று,டிசெ.29

வடமராட்சிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலாற்று கைத்தரங்கணிப்பு கருத்தரங்கு, செயலமர்வு கருத்தரங்கு இன்றும் எதிர்வரும் புதன்கிழமையும் காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியால ஆசிரிய நிலையத்தில் நடைபெறும். இக்கருத்தரங்குகளில் இதுவரை பங்கேற்காத ஆசிரியர்கள் இருதினங்களில் வசதியான ஒரு தினத்தில் கலந்துகொள்ள வேண்டுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

(ஒ-36)

## மின்சாரம் வழங்க கோரிக்கை

அச்சுவேலி,டிசெ.29

அச்சுவேலி வடக்கு அந்தோனியார் கோயில் முன் ஒழுங்கைக்கு மினசார விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் மின்சார சபைக்கு மகஜர்மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இடப்பெயர்வுக்கு முன்னர் மின் இணைப்பு செய்யப்பட்டிருந்த ஒழுங்கையில் மின்கம்பங்கள் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட போதிலும் அதனைச் சீர் செய்து இதுவரையும் மின்இணைப்பு வழங்கப்படவில்லை என மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-11)

## இசையரங்கில் இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.29

மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் இடம்பெற்றுவரும் இலட்சார்ச்சனையை ஒட்டி தினமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இசையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை செல்வன் பஞ்சமூர்த்தி குமரேஸ் வழங்கும் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். வயலின் - ஜெயராம், மிருதங்கம் - துரைராஜா, தவில் - செந்தில்நாதன் ஆகிய கலைஞர்கள் பங்கேற்பார்கள். (ம-8-86)


**SALE**
வீடியோ பட நாடாக்கள்
75/=
நைட் வீடியோ
உரும்பிராய்.
(சலுகை - 05.01.2003 வரை)
(12411)



யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## 150 ஆவது ஆண்டு நிறைவு
## 1852-2002

**மூன்றாம்நாள் 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை**
காலை நிகழ்வு முற்பகல் 10.00 மணி
150ஆவது ஆண்டு (1852 - 2002) நிறைவை முன்னிட்டு
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர், ஊழியர்களைப் பாராட்டுதலும் கௌரவித்தலும்

*இடம்:* கல்லூரி கலை அரங்கம்
*தலைமை:* திரு.க.விநாயகலிங்கம் *(ஓய்வுபெற்ற அதிபர்)*
*விருந்தினர்கள்:* திரு.சின்னையா சிவநேசன் *(முன்னாள் அதிபர்)*
திரு.வி.பொன்னம்பலம் *(தலைவர். பழைய மாணவர் சங்கம். கொழும்பு)*
திரு.இ.சிவஞானசுந்தரம் *(கோட்டக் கல்விப் பணிப்பாளர். கோப்பாய்)*

### நிகழ்ச்சி நிரல்

- அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோரை அழைத்துவரல்
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புரை : திரு.எஸ்.கே.தங்கவேல் *(விழாச் சபைச் செயலாளர்)*
- ஆசியுரை : சிவஸ்ரீ பூ.கீதச்சந்திரக்குருக்கள் *(பிரதம குரு. ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோயில். கோப்பாய்)*
  வண.பிதா ஏ.எவ்.செலஸ்ரீன் அடிகள் *(பங்குத் தந்தை. கோப்பாய். திருநெல்வேலி)*
- தலைமையுரை
- வாழ்த்துரை வழங்குவோர்:
  திரு.க.இ.குமாரசாமி *(பழைய மாணவர்)*
  திரு.எஸ்.செல்லத்துரை *(முன்னாள் பா.அ.சங்கச் செயலாளர்)*
  திரு.ஆ.சக்திவடிவேல் *(உபதலைவர். பா.அ.சங்கம்)*
  திருமதி ச.கனகரத்தினம் *(பழைய மாணவி. இளைப்பாறிய பிரதி அதிபர்)*
  திரு.ஆ.ஜெயபாலசிங்கம் *(செயலாளர். ப.மா.சங்கம்)*
  செல்வி ம.கொலஸ்ரீனா *(பழைய மாணவி)*
  செல்வி சீ.மகிந்தினி *(பழைய மாணவி)*
  செல்வன் ந.தவச்செல்வம் *(சிரேஷ்ட மாணவ தலைவர்)*
  செல்வி சி.யாழினி *(மாணவ முதல்வர் சபை)*
- கௌரவிப்பு: அதிபர் திரு.ந.சிவகடாட்சம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்து நினைவுச் சின்னம் வழங்கல்
- விருந்தினர் உரை:
- பதிலுரை: அதிபர் திரு.சி.சிவலிங்கம் *(ஆசிரியர்கள் சார்பில்)*
  திரு.இ.கிருபராஜா *(கல்விசாரா ஊழியர்கள் சார்பில்)*
- நன்றியுரை: திரு.யோசப்தாவீது *(விழாச்சபைச் உபசெயலாளர்)*

ஒழுங்கமைப்புக் குழு,
இணைச் செயலாளர்கள்
திரு.எஸ்.தங்கவடிவேல், திரு.யோசப்தாவீது

**மூன்றாம் நாள் 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை**
*அமரர் E.K.சண்முகநாதன் அரங்கு*
மாலை நிகழ்வு பிற்பகல் 4.00 மணி

*தலைமை:* திரு.ந.சிவகடாட்சம் *(அதிபர்)*
*பிரதமவிருந்தினர்கள்:* திரு.சின்னையா சிவநேசன் *(கல்லூரி முன்னாள் அதிபர்)*
திரு.வீ.பொன்னம்பலம் *(தலைவர். பழைய மாணவர் சங்கம். கொழும்பு)*
*சிறப்பு விருந்தினர்கள்:* திரு.பொ.விக்கினேஸ்வரலிங்கம் *(பழைய மாணவர்)*
திருமதி தவபுத்திரி யேசுதாசன் *(பழைய மாணவி)*
திருமதி ச.கனகரத்தினம் *(பழைய மாணவி. முன்னாள் பிரதிஅதிபர்)*

### நிகழ்ச்சி நிரல்

* மங்கள விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* மங்கள இசை (இருபாலையூர் நா.பாலசுப்பிரமணியம் குழுவினர்)
* வரவேற்புரை : திரு.யோசப்தாவீது *(உபசெயலாளர். விழாச்சபை)*
* ஆசியுரை : சிவஸ்ரீ ம.மகாலிங்கசிவக்குருக்கள் *(செயலாளர். அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர்சபை)*
  அருட்திரு.யோன் மவுலின் *(இயக்குநர். மறைக் கல்வி நடு நிலையம்)*
* வாழ்த்துரை: திரு.க.இ.குமாரசாமி *(பழைய மாணவர், சமூக சேவையாளர்)*
* தலைமையுரை
* கௌரவிப்பு நிகழ்வு
  ☆ பழைய மாணவர் சங்கத்துக்கூடாக பாடசாலை வளர்ச்சிக்கு உதவியமைக்காக -
  திருமதி த.யேசுதாசன்
  திரு.எஸ்.கே.தங்கவடிவேல்
  திரு.பொ.விக்கினேஸ்வரலிங்கம்
  ☆ விழாச்சபை செயற்பாடுகளில் வாழ்த்துப்பா ஆக்கம்
  திருமதி ச.கனகரத்தினம்
  ☆ நடன நிகழ்ச்சி ஒழுங்கமைப்பில்
  செல்வி தர்சினி தர்மகுலசிங்கம்
  ☆ இருபாலையூர் தவில் மேதை நா.பாலசுப்பிரமணியம் குழுவினர் ஆகியோரைக் கௌரவித்தலும் பாராட்டுதலும்
* விருந்தினர் உரை
* நன்றியுரை : திரு. எஸ்.கே.தங்கவடிவேல் *(செயலாளர். விழாச்சபை)*

### கலை நிகழ்ச்சிகள்

* இசை அரங்கு : திருமதி குஞ்சலம்மா பசுபதீஸ்வரன் *(இசை ஆசிரியை. யாழ்/மங்கையர்க்கரசி வித்தியாலயம். நல்லூர்)*
* நடன அரங்கு : செல்வி தர்சினி தர்மகுலசிங்கம் *(நாட்டிய கலைமணி. யாழ். பல்கலைக்கழகம் அவர்களின் மாணவிகள் வழங்கும் நடன நிகழ்ச்சி)*
* நாடகம் : யாழ்.முன்னணி நடிகர்கள் வழங்கும் இசை நாடகம்

அணி செய் கலைஞர்கள்

மங்கள இசை வழங்குவோர்:
இருபாலையூர் நா.பாலசுப்பிரமணியம் குழுவினர்
நாதசுரம் : திரு. S.V.முருகையா, திரு. S.ரமேஸ்
தவில் : திரு.நா.பாலசுப்பிரமணியம், திரு.மு.கண்ணன்

இசை நடன அரங்கில் அணிசெய் கலைஞர்கள்
மிருதங்கம் : திரு.க.சத்தியதாஸ்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
பாட்டு : திருமதி.ம.சுப்பிரமணியம், திருமதி.ம.சிவயோகநாதன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அமைப்புக்குழுவினர், 150ஆவது ஆண்டு விழாச் சபை.

நினைவுச் சின்ன அன்பளிப்பு : திரு.க.முத்துக்குமாரசாமி *(கிராம அலுவலர்)*
உபதலைவர் - ஒழுங்கமைப்புக் குழு

கல்லூரியை வாழ்த்துகின்றோம்:
1. *பழைய மாணவர் சங்கமும், அதன் கொழும்பு, லண்டன், கனடாக் கிளையினரும்*
2. *பாடசாலை அபிவிருத்திச் சங்கம்*
3. *கல்லூரியின் மாணவ மன்றங்கள்*


(C/25635)

# இலங்கையில் அமைதி திரும்புவதை இந்திய அரசு விரும்பவில்லையா?

**இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளில் தீவிர முன்னேற்றம் காணப்படும் வேளையில், இந்தியா அந்த முயற்சியை எதிர்க்கிறது - அந்த முயற்சிகளை விரும்பவில்லை என்ற தோற்றத்தை இனவாதக் கட்சிகள் உருவாக்க முனைகின்றன. இதிலுள்ள உண்மை நிலைமையை ஆராய்கிறார் கட்டுரையாளர் சுனந்த தேசப்பிரியா. "லங்காதீப" வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

ஸ்ரீ லங்காவில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்தியா எத்தகைய நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கிறது? இச்சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு இந்தியா முயற்சிக்கின்றதா? ஐ.தே.முன்னணி அரசைக் கவிழ்த்து, பொ.ஐ.முன்னணி - ஜே.வி.பி. அரசை நிறுவ இந்திய அரசு ஆர்வம் கொண்டுள்ளதா?

மேற்கண்டவாறு கடந்த சில வாரங்களாக நாட்டின் சமாதான முயற்சிகள் மீது இந்திய அரசின் நோக்கம் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக பற்பல கருத்து வெளிப்பாடுகளை எம்மால் அவதானிக்க முடிந்தது. ஸ்ரீ லங்காவின் இனப் பிரச்சினையில் இந்தியாவுக்கு உள்ள நெருக்கமான தொடர்பு நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகும். 1981ம் ஆண்டின் பின்னர் ஸ்ரீ லங்காவின் இனப்பிரச்சினை தொடர்பான பாரிய சிக்கல்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் அதில் தலை



யிடாது விலகிச் செல்ல இந்தியாவால் இயலாமல் போயிற்று. இந் நாட்டு தமிழ் மக்களுக்காக தனி இராச்சியக் கோரிக்கையை முன்வைத்து இயங்கிய தலைவர்கள் யாவரும் இந்தியாவைத் தம் தாய்நாடாகவே கருதினர். இந்நாட்டுத் தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களில் அக்கால கட்டத்தில் இந்தியா உதவ முன்றதாகவே தோன்[illegible] இந்நாட்டு தமிழ் மக்களின் [illegible] அபிலாசைகளுக்கு ஆதரவளிப்பதான தோற்றத்தை உருவாக்கக் கடந்த காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா முயற்சிப்பதாக இந்திய அரசியல் தலைவர்கள் காட்டிக் கொள்ளவில்லை. ஸ்ரீ லங்காவின் அரசியல் நடவடிக்கைகளை ஆதரிப்பதாக உறுதி வழங்கினால் அது இந் நாட்டுத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை ஆதரிப்பதாகத் தெரிவிப்பதாக அமையும் என்பதனாலேயே இந்தியா அவ்விதமான இறுக்கமான போக்கைக் கடைப் பிடித்தது. ஸ்ரீ லங்கா பிரிவுபடாத ஒரே நாடாக நிர்வகிக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டையே இந்திய அரசு கடந்த பத்து ஆண்டு காலமாக பேணி வருகிறது.

இன்றைய ஸ்ரீ லங்காவின் அரசியல் நிலைவரத்தில் முக்கியமான விடயமாக அமைவது தற்போது நம் நாட்டில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாடு ஆகும். இவ் விடயம் பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு உள்ளாகி, சிக்கலான நிலையொன்றைத் தோற்றுவித்துள்ளது. கடந்த ஆண்டில் சமாதானம் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான சமயம், இந்திய அரசு உத்தியோக பூர்வமான தனது ஆதரவைத் தெரிவித்தது. புரிந்துணர்வு மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் தொடர்பான நடவடிக்கைகளை இலகுபடுத்த நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் இங்கு வந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்கள் இந்தியாவுக்குச் சென்று அரசுத் தலைவர்களை சந்தித்து ஆலோசிக்கத் தவறவில்லை. அதேபோன்று ஐ.தே. முன்னணி அரசின் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான தனது சகல நடவடிக்கைகளின் போதும் இந்திய அரசியல் தலைவர்களைத் தொடர்புகொண்டு கௌரவமளித்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த ஆண்டில் மூன்று தடவைகள் இந்தியப் பயணம் மேற்கொண்டு இந்தியத் தலைவர்களுக்கு சமாதான முயற்சிகள் பற்றி விளக்கமளித்தார். பொ.ஐ.முன்னணி அரசின் கடைசிக் காலத்தில் அவ்வேளையில் எதிர்க் கட்சித் தலைவராய் இருந்த ரணில் விக்கிரமசிங்க, இந்தியத் தலைவர்களை அடிக்கடி சென்று சந்திக்கும் வழக்கத்தை கைக் கொண்டிருந்தார். இதனால், தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாக மட்டுமன்றி, வேறு பல முக்கியத்துவமான காரணங்களுக்காகவும் இந்தியாவுடன் இறுக்கமான உறவைப் பேணிக் கொள்வதில் ஐ.தே.முன்னணி அரசு வெற்றி கண்டுள்ளதாகவே தோன்றுகிறது.

இதற்கு முற்றிலும் எதிர்மாறாக எதிரணியில் முக்கிய இடம் வகிக்கும் ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. கட்சியினரின் பிரசார நடவடிக்கைகளின் விளைவாக கடந்த சில வாரகாலத்துள் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் மற்றும் ஐதே.முன்னணி அரசு ஆகியவை தொடர்பாகத் தான் கைக்கொண்டிருந்த தனது முன்னைய நிலைப்பாட்டை இந்திய அரசு மாற்றிக் கொண்டுள்ளதாக எண்ணத் தோன்றுகிறது. கடந்த சில நாள்களின் முன் இந்திய அரசுத் தலைவர்களைச சந்தித்துவிட்டு திரும்பியுள்ள பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற அங்கத்தவர்கள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாடு இந்திய அரசு, ஸ்ரீ லங்காவின் சமாதான முயற்சிகள் தொடர்பாக கொண்டுள்ள தற்போதைய நிலைப்பாட்டை விளக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டதாகும். அப் பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்படும் அதிகாரப் பகிர்வு முறைமைக்கு மேற்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கிய விதத்தில் நம் நாட்டில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்வதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதை இந்திய அரசு எதிர்ப்பதாக அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார். அது மட்டுமன்றி, சோனியா காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் கட்சி பதவிக்கு வந்தால் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை கைது செய்து தண்டிக்க நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகவும் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பான செய்திப் பத்திரிகைகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்திய அரசினால் உள்ளக நெருக்குதல்கள் ஏற்படுத்தப்படுவதாக அடிக்கடி செய்தி வெளியிடுகின்றன. ஈழக் கோரிக்கைக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள இந்திய அரசு முடிவு செய்திருப்பதாகவும் ஐ.தே.முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்களை முறியடையச் செய்ய இந்திய அரசு ராஜதந்திர ரீதியிலான முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராவதாகவும் அதன் ஒரு பகுதியாகவே தாய்லாந்து அரசு மேற்கொண்டும் இச்சமாதான பேச்சுக்கள் தொடர்பாக உதவிகள் எதையும் வழங்குவதை நிறுத்தியுள்ளதாகவும் பற்பல விதமான செய்திகளை இப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன.

இம்மாத முற்பகுதியில் ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற ஸ்ரீலங்காவின் புனரமைப்புக்கு உதவுவது தொடர்பான சர்வதேச மாநாட்டில் இந்தியா தனது சார்பான உயர்மட்ட பிரதிநிதி எவரையும் அனுப்பி வைக்கவில்லை. இம்மாநாட்டுக்கு முன்னர் ஸ்ரீலங்கா - அமெரிக்க அரசுகளுக்கிடையே கைச்சாத்திடப்படத் திட்டமிடப்பட்டிருந்த இராணுவ உதவிகள் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதை ஒத்திவைப்பதற்காக இந்தியா முயற்சி மேற்கொண்டது. அதன் பின்னர் இந்தியா, அமெரிக்க அரசுடன் இணைந்து பரஸ்பர போர்ப் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஸ்ரீலங்கா அரசு முன் வைத்துள்ள இந்திய - இலங்கை தரைவழிப் பாதைத் திட்டம், விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் நாட்டைக் கைப்பற்றும் நோக்குடன்தயாரிக்கப்பட்டதென இந்திய உளவுத்துறை தெரிவித்துள்ளதாக ஸ்ரீல.சு.கட்சியுடன் தொடர்புடைய மற்றொரு பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது. அதைப் போன்றே விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் ஒலிபரப்புச் சாதனங்கள் இந்திய அரசுக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் நோக்கத்திலேயே வழங்கப்பட்டுள்ளதாக, இந்திய உளவுத் துறையினர் கண்டுபிடித்துள்ளதாக மற்றொரு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது.


உண்மையில் ஸ்ரீலங்காவின் முக்கிய அண்டை நாடான இந்தியா,



ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகள் தொடர்பாக விரோதப் பாங்கைக் கடைப்பிடிக்குமாயின் அது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய பாரதூரமான விடயமேயாகும். ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகளில்தான் மத்தியஸ்தம் வகிக்கவில்லையெனவும், வெறுமனே சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் இந்திய அரசு கருதுவதாகவே இந்த உத்தியோகபூர்வமான கருத்தைக் கருத வேண்டியுள்ளது. ஆனால், இச்சமாதான முயற்சிகளுக்கு எதிரான எவ்வித கருத்தையும் இந்திய அரசோ, சோனியா காந்தியோ வெளியிடவில்லை. அதற்காக இந்திய அரசு இச்சமாதான முயற்சிகளுக்கு தனது நூற்றுக்கு நூறு வீத ஆதரவை அளிப்பதாகவும் அர்த்தம் கொள்ள இயலாது. இவ்விடயத்தில் சிற்சில சிக்கல்கள் தோன்றியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. தன் யுத்தப்பிராந்திய வட்டகைக்குள் ஸ்ரீலங்காவையும் சேர்த்துக் கொள்ள அமெரிக்கா முயற்சிப்பதை இந்திய அரசு விரும்பவில்லை என்பது வெளிப்படையாகத் தோன்றுகின்றது. ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சிக காலத்தில் கூட இவ்வகையான பிரச்சினை நிலவியதாகத் தெரிகிறது. ஆனால், 1987 இல் ஸ்ரீலங்காவின் உள்நாட்டு யுத்தத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கையில் இறங்கியசமயம் அமெரிக்க அரசு ஜே.ஆரின் அரசைக் காப்பாற்ற ஓடி வரவில்லை. அச்சமயம் இந்தியத் தலையீட்டுக்கு எதிராக ஜே.ஆரின் அரசு அமெரிக்காவின் உதவியை நாடியதாகவும், அதற்குப் பதிலாக இந்திய அரசுடன் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ளுமாறு, அமெரிக்கா ஜே.ஆரின் அரசுக்கு ஆலோசனை தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை முதன் முதலில் அமெரிக்காவே வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டது. அன்றிலிருந்து ஸ்ரீலங்காவின் விடயத்தில் இந்தியாவின் தலையீடு பற்றியோ மற்றும் அவசர உதவி கோரப்படும்வேளை உதவிக்கு வரத் தயாராய் இருந்தது பற்றியோ அமெரிக்கா அக்கறை காட்டிக்கொண்டதில்லை. அமெரிக்காவின போர் வலுமிக்க அதிகாரத்தின் மத்தியிலும் தென்னாசிய வட்டகையில் இந்தியா தன் பிராந்திய முக்கியத்துவத்தை நிலைநிறுத்தி வருகிறது. விசேடமாக தென்னாசியாவில் இந்தியாவின் போர்வலு மிக்க அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதாரத் தேவைகளுக்கும் எதிராக இன்று அமெரிக்கா எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்வதைத் தவிர்த்து வருகின்றது. ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அமெரிக்காவுக்கு எதிராக இந்தியாவைப் பயன்படுத்தினாலும்சரி, இந்தியாவுக்கு எதிராக அமெரிக்காவைப் பயன்படுத்தினாலும்சரி 1980களில் இந்நாட்டில் நிலவிய யுத்த நிலைமையையே நாம் எதிர்கொள்ள நேரிடும். இன்று தென்னாசிய வட்டகையில் இந்தியாவின் தலைமைத்துவத்தை அமெரிக்கா அங்கீகரிப்பதைப போன்று, முழு உலகத்துக்குமான அமெரிக்காவின் தலைமைத்துவத்தை இந்தியாவும் அங்கீகரிக்கின்றது.

தற்போது இவ்விரு நாடுகளிலும் போர்வலுமிக்க அரசியல் நடைமுறை பேணப்படுவது, இவ்விரு நாடுகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நோக்கிலேயாகும். ஸ்ரீலங்காவின் திருகோணமலைத் துறைமுகத்தில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களில் சிலவற்றை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர், இந்திய நிறுவனமொன்றுக்கு அவற்றில் சில குதங்களைக் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டமை மேற்கூறிய அடிப்படையிலான செய்கையேயாகும். ஸ்ரீலங்காவில் தற்போது யுத்தஎதிர்பார்ப்புச்சூழல்கொண்ட அரசியல் நடத்தப்படுவதாகக் காட்டிக் கொள்ள வேண்டுமாயின் இப்பிராந்தியத்தில் இந்தியாவின் தலைமைத்துவத்தை அங்கீகரிப்பதன்மூலமே நிறைவேற்ற இயலும். விடுதலைப் புலிகள் அமைப்பு அண்மையில் பெற்றுக்கொண்ட உயர் வலுமிக்க ஒலிபரப்புச் சாதனங்கள் இந்தியாவுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகளுக்குப் பாவிக்க முயற்சி மேற்கொள்ளப்படுமானால், ஏவுகணை ஒன்றின் மூலம் அவற்றை அழித்துவிட இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயற்படும். அளவில் சிறிய ஒலிபரப்புச் சாதனங்களாயினும், அவற்றை மட்டுமல்ல, அவ்வகையான ஒலிபரப்பை மேற்கொள்ளும் ஒலிபரப்பு நிலையத்தையும் ஆகாயத்திலிருந்து துல்லியமாகத் தாக்கி அழிப்பது இன்று பெரியதொரு கருமமல்ல. அதே போன்று விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்கள் இந்தியாவின் நலனைப் பாதிக்காதவகையில் அமைவதற்கு அமெரிக்கா மட்டுமன்றி சர்வதேச சமூகமும் கவனம் செலுத்தி வருகின்றது. ஸ்ரீலங்காவுக்குள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையில் தனி இராச்சியம் ஒன்று அமைவதற்கு இடமளித்தலே இந்திய விரோத நடவடிக்கை என்ற விதத்தில் கணிக்கப்படுகிறது. இந்தியாவின் இந்தத் தேவையைக் கருத்தில் கொண்டு ஸ்ரீலங்காவைப் பிரிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என சர்வதேச சமூகம் உறுதி அளித்துள்ளது. பேச்சுக்கள் தொடரத் தாம் தொடர்ந்தும் உதவியளிக்க தயாராய் இருப்பதாக அண்மையில் தாய்லாந்து அரசு மீண்டும் பகிரங்கமாகத் தெரிவித்திருப்பது மேற்கூறிய கொள்கையின் அடிப்படையிலேயே பேச்சு மேற்கொண்டும் முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெளிவுபடுத்துவதாய் அமைகின்றது எனவே, பிளவுபடாத ஸ்ரீலங்காவுக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதன்மூலம் அரசியல்தீர்வு காண்பதற்கு, பேச்சுகளில் முன்னுரிமை அளிக்கப்படும் என்பது உறுதியாகத் தென்படுகிறது.

ஸ்ரீலங்காவின் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தென்னாசிய வட்டகையில் இந்தியாவின் தலைமைத்துவத்திற்கு எத்தகைய பாதிப்புக்களையும் ஏற்படுத்தமாட்டா. தென்னாசிய வட்டகையில் எப்போதும் தனது தலைமைத்துவத்தை நிலை நிறுத்துவது இந்தியாவின் முக்கிய தேவையாகும். சமாதான நடவடிக்கைகள் மூலம் ஸ்ரீலங்காவுக்குள் பிறிதொரு நாடு உருவாக இடமேற்படலாகாது. இது இந்தியாவின் மற்றொரு தேவையாகும். இந்த அடிப்படையிலேயே ஸ்ரீலங்காவின் சமாதானப் பேச்சுக்கள முன்னெடுக்கப்பட்டு தீர்வு எட்டப்படுவதற்காக ஸ்ரீலங்கா அரசும் சர்வதேச சமூகமும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. எனவே, ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகள் குறித்து இந்திய அரசின் நிலைப்பாட்டின் விரோதப் போக்கு ஏற்பட எவ்வித காரணமுமில்லை. அவ்விதமான போக்கை கடைப்பிடிக்க வேண்டிய நிலையும் இந்தியாவுக்கு ஏற்படவில்லை. காலஞ்சென்ற இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒருவரின் நினைவுதின நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இந்தியாவுக்கு சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா, தாம் இச்சமாதான முயற்சிகளுக்கு தனது முற்றுமுழுதான



ஆதரவை வழங்கத் தயாராய் உள்ளதாக அங்கு தெரிவித்துள்ளார்.

இந்திய நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவது போன்ற விதத்திலான சமஷ்டி முறையொன்றினையே ஸ்ரீலங்காவில் நடைமுறைப்படுத்தப் படுவதையே தாம் விரும்புவதாக இந்திய அரசுத் தலைவர்கள் தெரிவித்ததாக அனுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார். சமாதான முயற்சிகள் தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து இந்தியா ஆர்வம் காட்டுவது காத்திரமானதொரு விடயமாகும். 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஸ்ரீலங்காவின் வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மாகாண சபையை உருவாக்கியதில் இந்தியா வகித்த பங்கினை நாம் இலேசில் மறந்து விட முடியாது, இன்று இந்தியாவின் தலையீட்டைக் கோரும் ஸ்ரீ.ல.சு. கட்சியும் ஜே.வி.பியுமே அன்று இந்திய அமைதிப்படையின் வருகையை ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வருகை என்ற பெயரிட்டு அழைத்து இந்திய விரோதப் போக்கை வளர்த்தவர்களாவர். இந்திய அரசின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட மாகாண சபைத் திட்டத்திற்கு அவர்கள் காட்டிய எதிர்ப்பாக அது கருதப்பட்டது. அன்று இந்தியாவின் தலையீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகளுக்கு அவர்கள் ஆதரவு தெரிவித்தனர். இன்று விடுலைப்புலிகள் அமைப்பு

**தமிழில்:**
**வியெஸ்ரீ**

தமது தமிழீழக் கோரிக்கையினின்றும் இறங்கி வந்துள்ளதுடன் சமஷ்டி அமைப்புக்கான தமது விருப்பினையும் வெளிப்படுத்தியுள்ளனர். இந்தியாவும் அன்று போலவே இன்றும் மாகாண சபை முறைமையை மட்டுமன்றி அதற்கும் மேலான அதிகாரங்கள் கொண்ட இந்தியாவில் கைக்கொள்ளப்படும் சமஷ்டி முறை போன்று ஸ்ரீலங்காவிலும் அறிமுகப்படுத்தப்படுவதைக் காண விரும்புகிறது. அதுமட்டுமன்றி, அன்று இந்திய இராணுவத்தின் வருகையையும், மாகாண சபைத் திட்டத்தையும் எதிர்த்த அமைச்சர் பீரிஸ் கூட இன்று இந்தியாவின் கருத்தை ஆதரிக்கின்றார். ஆகவே, ஸ்ரீலங்காவில் சமஷ்டி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்படுவது நிச்சயமாகும். அந்த விதத்தில் இந்தியா ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படுவதை முன்னரை விட இன்று மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கின்றது. இது மிக முக்கியமான ஒரு விடயமாகும். இது ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகளை இந்தியா எதிர்ப்பதாக காட்டப் பிரசாரம் மேற்கொண்டுவரும் கூட்டத்தினரை ஓரங்கட்ட உற்சாகம் அளிக்கும் விடயமாகும். மொத்தத்தில் இந்தியா ஸ்ரீலங்காவில் சமஷ்டிமுறை கடைப்பிடிக்கப்படுவதை ஆதரிப்பதாகக் கொள்ள முடியும்.

## துயர் பகிர்கின்றோம்

யா/இருபாலை சி.சி.த.க.பாடசாலை ஆசிரியை
திருமதி பே.அமலஉற்பவ - செல்வராணி அவர்களின்
அன்புத்தந்தையார்

### எலியாஸ் குரூசைப்பிள்ளை யாக்கோப்பு

அவர்கள் 27.12.2002 அன்று இயற்கையெய்தியமையையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.

(12434)


பிறக்கும் புதுவருடத்தை முன்னிட்டு
விசேட சிறப்புத் தள்ளுபடி!

தரமோ மிக உயர்வு

விலையோ மிக மலிவு

இந்த வருடம் 31.12.2002 வரை மட்டுமே!

## லைடன் புடைவை நிலையம்

புத்தாண்டுக்காக இன்று ஞாயிறு முழு நாளும் திறந்திருக்கும்!
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222 2381
(பஸ் நிலையம் முன்பாக)

(C-25734)


## வடமராட்சி லயன்ஸ் கழகம்

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

இன்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருந்த சீட்டிழுப்பு, தவிர்க்கமுடியாத காரணங்களால் மேலும் நீடிப்புச் செய்யப்பட்டு 15.01.2003 புதன்கிழமை கழக செயலகத்தில் நடைபெறும்.

செயலாளர்,
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(C-25731)

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

### முக்கியமான அழைப்பு

விஷேட மஹாசபைக் கூட்டமும் கலந்துரையாடலும்

இடம்:- நல்லூர் நாவலர் மணி மண்டபம்
*(நல்லூர் ஆலய முன்பாக)*

நாள் :- இன்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- பி.ப. 2.00 மணி (புதிய நேரம்)

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக
இந்துசமய கலாசார விவகார அலுவல்கள்
**அமைச்சர் மாண்புமிகு திரு.தி.மகேஸ்வரன்**
அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்துமத குருமார்கள் எதிர்கொள்ளும் பலதரப்பட்ட நடைமுறை விடயங்கள், ஓய்வூதியம், கடன்பெறும் திட்டம், சமய - சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், உயர்கல்வி, வேலைவாய்ப்பு, புலமைப்பரிசில்கள், வீடமைப்புத்திட்டம் போன்ற விடயங்களும், முக்கியமாக சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்துக்கு இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்படவிருக்கும் குருகுல (வேதாகம கலாசாலை) திறப்பு விழா பற்றியும் இந்தியாவிலிருந்து சாஸ்திரிகள் ஒருவரை அழைப்பது பற்றியும் கலந்துரையாடப்பட விருப்பதால் தாங்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு எம்சமூகமேம்பாட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் கிடைக்கப் பெற்றிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தங்கள் கருத்துக்களையும் எம்முடன் பகிர்ந்து எம்செயற்பாடுகளுக்கு நல்லாதரவு தந்துதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுவதோடு, இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைத்து அந்தணப் பெருமக்களையும் சிரமம் பாராது சமுகந்தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ப. மனோகரக் குருக்கள்
தலைவர்.

கா.சந்திரசேகரசர்மா
பொதுச்செயலாளர்.

(12430)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்
29
-
05
-
1936



விண்ணுலகில்
09
-
01
-
2002

### திருமதி ஜெயலெட்சுமி சிவப்பிரகாசம்

*(முன்னாள் ஆசிரியை)*
திதி : 29.12.2002

ஓராண்டு ஓடி மறைந்ததுவோ - எம்
விழியோரங்கள் இன்னும் காயவில்லை
ஓலங்கள் எம்மனதில் எழும் வேளையில்
ஓடி வந்து ஆறுதல் தர யார் எமக்கு?
ஆறாது எம்துயரம் ஆயுள் உள்ளவரை!

*ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.*

*இல.09, கச்சேரி லேன்,*
*கச்சேரி, யாழ்.*

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(12427)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி,டிசெ.29

மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு இல்லத்தில் கல்வி பயின்று தரம் ஒன்றுக்கு செல்லும் மாணவர்களுக்கு பரிசளிப்பும், ஐந்தாம்தர புலமைப்பரீட்சையில் சித்திபெற்ற மாணவனுக்கு பாராட்டும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

(ஒ-117)

## வடமராட்சி பாடசாலை அதிபர்களுக்கு!

செம்பியன்பற்று,டிசெ.29

வடமராட்சி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஆசிரியர் செயலாற்று கைத்தரங் கணிப்பு கருத்தரங்கும் செயலமர்வும் நாளையும் நாளை மறுதினமும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

30 ஆம் திகதி கரவெட்டிக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கும், 31 ஆம் திகதி பருத்தித்துறை கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கும் கருத்தரங்கும் செயலமர்வும் இடம்பெறும். மருதங்கேணி கோட்டப் பாடசாலை அதிபர்கள் மேற்குறிப்பிட்ட தினங்களில் தமக்குப் பொருத்தமான திகதியில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-36)

## கார் சாரதி தேவை

**30-45 வயதுக்குட்பட்ட கார் சாரதி தேவை. சம்பளம் நேரில பேசித் தீர்மானிக்கப்படும்.**

தொடர்பு:-
Sராமநாதன்
54/12, சந்நாமைநகர் முன் ஒழுங்கை
பண்டிதன்நன்வு,
யாழ்ப்பாணம்.

(12431)

## கொய்யாத்தோட்ட கிறிஸ்து அரசர் ஆலய

### இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | ஆறுதல் பரிசுகள் | |
|---|---|---|---|
| முதலாம் பரிசு | - 1718 | 1. 224 | 6. 1073 |
| இரண்டாம் பரிசு | - 1645 | 2. 1256 | 7. 3809 |
| மூன்றாம் பரிசு | - 1691 | 3. 4534 | 8. 1714 |
| | | 4. 4894 | 9. 1628 |
| | | 5. 4697 | 10. 3838 |

வெற்றி இலக்கங்களுக்கு உரியவர்கள் நாளை (30.12.2002) திங்கட்கிழமை கிறிஸ்து அரசர் ஆலயத்தில் (மாலை 5 மணி) இடம்பெறும் ஒளிவிழா நிகழ்வில் தவறாது வந்து பெற்றுக்கொள்ளவும்.

(12417)

- இளைஞர் மன்றம்.

## யாழ்ப்பாணம் மாநகரசபை

## கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்காணும் இடத்திலுள்ள ஆட்டிறைச்சிக்கடையை 11.01.2003 முதல் 31.12.2003 வரையான காலத்துக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி -**
**10.01.2003 வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிவரை.**

**கேள்விப்படிவம் வழங்கும் இறுதி திகதி -**
**09.01.2003 வியாழக்கிழமை பி.ப.3.00 மணிவரை.**

**கேள்விகள் திறக்கும் திகதி -**
**10.01.2003 வெள்ளிக்கிழமை பி.ப.12.30 மணி.**

| இறைச்சிக்கடை அமையவுள்ள இடம் | மீளளிக்கக்கூடிய பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி (வற் நீங்கலாக) |
|---|---|---|
| ஜின்னா வீதி | 2,500.00 | 15,000.00 |

குறித்த இறைச்சிக்கடைக்கான இடத்தை கேள்விக்காரரே ஒழுங்கு செய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறியலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2002.12.28

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(C-25730)

## 30 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



*திரு.திருமதி விசாகரெத்தினம் - வசந்தா*
தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வன்

# குணாளன்

தனது 30 ஆவது பிறந்தநாளை இன்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை தனது தம்பிமார் ஜெனாளன், வேலழகனுடன் லண்டனில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, மனைவி சுகந்தினி, சகோதரி வினோதினி, மைத்துனர் விமலதாசன், நிசாந்தினி, அனுஷன், வாகீசன், புலேந்திரன் மாமா, தேவிமாமி, மைத்துனர் சுரேந்திரன், மதிமச்சாள், சித்திமார், சித்தப்பாமார், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

க. விசாகரெத்தினம்.
37/1, சிவகுருநாதர் லேன், பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(95151)


DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

## இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

பாடசாலை மாணவர்களுக்கு இலவசம்
நீங்கள் கொள்வனவு செய்யும்



# DSI



பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் (SHOES)
ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**DSI** பாதணிகளின் யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

## SUPER SHOES சுப்பர் சூஸ்

(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்)
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(12134)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI



# புதிய சலுகை விலை

**ரூபா 42,504/-**

ஹீரோ சைக்கிள் (49cc) பெறுமிடம்

**அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனம்,**
இல.07, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C/25745)


## வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகளுக்கு!

எமது பாடசாலைச் சின்னம் பொறிக்கப்பட்ட பாடசாலைப் புத்தகப் பை வெவ்வேறு வடிவங்களில் பாடசாலையில் 06.01.2003 முதல் விற்பனைக்கு உண்டு. பாடசாலை மாணவிகள் அவற்றைப் பழைய மாணவர் சங்க காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை அறியத்தருகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
(C/25737)

## யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் வருடாந்த பொதுக்கூட்டம் - 2002

மேற்படி கூட்டம் 30.12.2002 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்/மத்திய கல்லூரியில் நடைபெறும். இத்தருணத்தில் கழகத்தின் ஓராண்டு பூர்த்தியும் 1996இல் இருந்து இன்றுவரை கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்த அதிபரின் கௌரவிப்பும் நடைபெறும்.

செயலாளர்
28.12.2002 (C-25739) **யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம்**


# மலிவு விலையில் தினத்தாள் கலண்டர்கள்

வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படி
அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய
யுனிலங்காவின் தயாரிப்பான
தினத்தாள் கலண்டர்கள் விற்பனையாகின்றன.
ஒன்றின் விலை 90/- ரூபா மட்டுமே
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

**மக்மிலன் புத்தகசாலை,** இல.03, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
**ஸ்ரீகாந் புத்தகசாலை,** (பஸ்நிலையம் முன்பாக), இல.165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C/25738)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



*திருமதி*
*உலகநாதன் இராஜேஸ்வரி*

மண்ணில் 04.06.1950
விண்ணில் 29.11.2002

*முப்பது பொழுதுகள் முழுதாய் அகன்றதம்மா!*
*அப்போதும் ஆறாது உன் துயரம்மா!*
*எப்போதும் இனியவளே, எம்முடனே தாயே!*
*இப்போதும் நீயிருந்தும் வழி காட்டுவாயே!*

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வ தோடு இன்று(29.12.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.* (12445)
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

# இதய அஞ்சலி

எம்மை என்றும் கலங்கவைத்துக் காலனடியேகிய
எம் அன்புக் கண்மணி
**செல்வராசா துவாரகாவிற்கு**
எம் இதய அஞ்சலிகளும் அவரை இழந்து கதறும் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களும்.

*யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை.* (12439)
• அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



29.11.2002 வெள்ளிக்கிழமை விண்ணகம் ஏகிய எமது அன்புத்தெய்வம்
**திருமதி சிவகாம்பு தங்கமுத்து (கனகம்மா)**
அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"சிவசம்பு இல்லம்,"*
*அல்லாரை றோட், மீசாலை.* (12442)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சமய சந்நிதியில்

ஸ்ரீவில்வலிங்க மகாகணபதி கோவிலில் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்) இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணி முதல் திருவாசகமுற்றோதல் வைபவம் இடம்பெறும். (ம-ரி)

★ ★ ★

சாவகச்சேரி, சங்கத்தானை இத்தியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினரால் திருவாசகமுற்றோதல் நிகழ்த்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

## ஹொக்கி இறுதியாட்டம்

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட ஹொக்கி சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் கிறாஸ் கொப்பர்ஸ் "ஏ" அணியும், ஓல்ட் கோல்ட்ஸ் அணியும் பங்குபற்றுகின்றன.முதலாம் இடத்திற்கான ஆட்டத்தில் கிறாஸ் கொப்பர்ஸ் "பி" அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதும்.

இந்த நிகழ்வில் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் சிவாஜி, பிரதம விருந்தினராகவும், சுன்னாகம் டிலக்ஸ் உரிமையாளர் அனுரா, சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ம-ரி)

## ஒளிவிழா

கைதடி அரசினர் முதியோர் இல்ல கிறிஸ்மஸ் ஒளிவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முதியோர் இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சாவகச்சேரி லிகோரியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு ரவிச்சந்திரன் அடிகளார் கலந்துகொள்வார்.

பட்டிமன்றம், நடன நிகழ்வுகளும், 'சமாதானத்தை நோக்கி' எனும் நாடகமும் இடம்பெறவுள்ளது. (ஒ-30)

☆ ☆ ☆

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் கிறிஸ்மஸ் ஒளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

பங்குத்தந்தை அருட்திரு எஸ்.யேசுரட்ணம் அடிகள் தலைமையில் நடைபெறும் ஒளி விழாவில் நாட்டியம், நாடகம் போன்ற பல கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-30)


**BRIGHTMAN**
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L 2005 கணித, உயிரியல், கலைப் பிரிவுகள்
ஆரம்பம்: 06.01.2003 Mon. 3.00
(விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன) (12331)

**BEACON**
யாழ்நகர்.
**A/L 2005**
**வர்த்தகப்பிரிவு**
எமது ஆசிரியர் குழு
ACC. - பாலவாசன்
ECO. - மோகன்
COM. - யசோ
ஆரம்பம் 05.01.2003
நேரம்:- 10a.m. (12408)

**ராஜா** யாழ்ப்பாணம்.
எம்.ஜி.ஆர். அவர்களின் 15 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு எம்.ஜி.ஆர்., ராதாசலூஜா நடித்த
**இதயக்கனி**
காட்சிகள்:10.30, 2.30, 6.30

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜுன், சிம்ரன், மும்தாஜ், ஆனந்தராஜ், நடித்த
**ஏழுமலை**
காட்சிகள்: 11.00, 3.00 (தினம்)
விசேட காட்சிகள்:
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 6.30 (பு.நே.)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சரத்குமார், நெப்போலியன், தேவயானி நடித்த
**தென்காசிப்பட்டணம்**
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (ப.நே.)
27-12-2002 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு
JACKION நடித்த SHAFT
இரவு 8.45 (புதிய நேரம்) மட்டும்.


# மரண அறிவித்தல்கள்

## முத்து தனபாலசிங்கம் (மணியம்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தை, ஆழக்கிணற்றடியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து தனபாலசிங்கம் நேற்று (28.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிதம்பரம் அவர்களின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (திக்கம் வடிசாலை), ராஜ்குமார், ஜீவனா, ஜீவன்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராசா, அருளகம் ஆகியோரின் சகோதரரும், தயானந்தன், சிவமலர், நவமணிதேவி, கீதா ஆகியோரின் அன்பு மாமனாரும் சஜாத், ரசாத், சகானா, சயானா, சாகித்தியன், ரிசிகேசன், விது ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்வாய் பங்குவம்பாடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆழக்கிணற்றடி,*
*கொற்றாவத்தை.* (C/25746)
தகவல்: த.சுரேஸ்குமார். (மகன்)

## திருமதி கணேசு பரமேஸ்வரி (சின்னக்கா)

மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், இல.66/6, இந்து மகளிர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசு பரமேஸ்வரி நேற்று (28.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தளையசிங்கம் - மீனாட்சி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கணேசுவின் அன்பு மனைவியும் சிறி, காந்தன், றோசா, ரங்கன், ராசன், மல்லிகா, காந்தி, விஜி, வாணி, நாதன், சொக்கன், நிமல் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தன், சத்தி, சிவா ஆகியோரின் பெரிய தாயாரும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் அரியதுரை, கேதாரலிங்கம், காந்தலிங்கம், ஜெகதீஸ்வரன், தனபாலதேவி, பஞ்சலிங்கம், காந்தரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலன், வசந்தராசா, வரதராசா, ரமேஷ்குமார், ராஜ்குமார், தவி, கலா, உதயகலா, ரீத்தா, யஷ்மின், பாலினி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*66/6, இந்து மகளிர் வீதி,*
*கந்தர்மடம் (ஆத்திசூடி பிள்ளையார் கோயில் அருகில்), யாழ்ப்பாணம்.* (12444)
தகவல்: பிள்ளைகள்.

## கந்தையா பொன்னுத்துரை (லேகிய கடை)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை அவர்கள் நேற்று (28.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பாக்கியம் தம்பதிகளின் செல்வப் புதல்வரும் மற்றும் மங்கையற்கரசியின் அருமைக் கணவரும் மயில்வாகனத்தின் (லண்டன்) அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணியம் (கனடா), தனபாலச்சந்திரன் (சோதி), காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் பாலசரஸ்வதி, பாக்கியராஜா, விமலாவதி, கமலாவதி (கனடா), புஷ்பாவதி (லண்டன்), பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் தந்தையாரும், துரைராஜா, காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம், செல்வராஜா மற்றும் சிவநாதன் (லண்டன்), கிருபாகரன் (லண்டன்), ஜெகதா (கனடா), பவளராணி, சரோஜா, மஞ்சுளாதேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No. 18, ராஜசிங்க வீதி,*
*வெள்ளவத்தை.*
*Tel.No. 504567* (12441)
தகவல்: சோதி (மகன்) No.26, அன்னசத்திரலேன், கந்தர்மடம்.

## தம்பு பொன்னையா

பிறவுண் வீதி, கலட்டிச் சந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பொன்னையா நேற்று (28.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் துரையம்மாவின் அன்புக் கணவரும், நித்தியரஞ்சிதம் (கமலா), விமலன் (விக்ரர்), விக்கினேஸ்வரி (உஷா), அன்ரன், விஜயன், அருள்வதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்தசாமி, இராசரத்தினம், காலஞ்சென்ற பன்னீர்ச்செல்வம், மேரிஜெசிந்தா, பிரதீபா, சுபாஜினி, ஆகியோரின் மாமனாரும், பேனாட் விஜிதா, கிருபாகரன் சுஜாதா, சிவமுரளி, குமார் கவிதா, சுபீதா, சுபீதர், சோபிதர், அமலன், நிமலன், எஸ்தர், எட்வினா, விவேக்சன், சுவேஜா, சுவேக்சன், ஜெமீசன், ஹரீசன், ஜெனிசன், கிருஸ்னி, சாருஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் நோயலின், றொசாலஸ், யேனிற்றா, யேசன், செரின்லாவண்யா, றொபின்சன்மார்க், ஏஞ்சல் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*76/59, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12436)
தகவல்: பொ.விமலன் (மகன்)

## வல்லிபுரம் செல்லையா

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லையா நேற்று (28-12-2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், யோகநாதன், யோகேஸ்வரி, ஜெயரஞ்சினி (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சின்னராசா (சாவ.ப.நோ.கூ.ச.), சிவகாமிப்பிள்ளை மற்றும் ஜெயரட்னர் (ரகு) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹேமலச்சனி, ஹேமமாலினி (வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை), சிவரஞ்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் நாகலிங்கம், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, சின்னாச்சி, சுப்பிரமணியம், பரமகுரு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-12-2002) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை, கொற்றாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (12440)
தகவல்: ஜெயரஞ்சினி (மகள்)

# தெற்கு எம்.பிக்கள் குழு மட்டுமே இன்று ஏ-9 ஊடாகச் செல்லலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த ஐ.தே. கட்சி மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார தலைமையிலான 85 பேர் கொண்ட குழு, ஞாயிற்றுக்கிழமையான இன்று ஏ-9 - கண்டி வீதியூடாக திரும்பிச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு காலத்தில் பயணிகள் சென்றுவர முகமாலை, ஓமந்தை சோதனை நிலையங்கள் இன்று திறக்கப்படும் என மக்கள் எதிர்பார்த்த போதும் -

அது தொடர்பாக படைத்தரப்பினதோ, செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினதோ அறிவிப்பு ஏதும் நேற்றிரவு வரை வெளியாகவில்லை.

ரஞ்சித் அலுவிகார தலைமையிலான குழு மட்டும் முகமாலை ஊடாக செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவை சர்வதேசக்குழு தெரிவித்தது. (ம-3)

# புற்றுநோய் ஆஸ்பத்திரியை திருத்துவதற்கு நடவடிக்கை

## யாழ். அரச அதிபர் முயற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.29

தெல்லிப்பழையிலுள்ள புற்றுநோய் சிகச்சை நிலையத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையிலான குழுவொன்று நேற்று அங்கு விஜயம் செய்தது.

யாழ்.அரச அதிபருடன் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் டாக்டர் சிவராசா, பொறியியலாளரும் செயலக அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகளை செய்ய வசதியாக ஆஸ்பத்திரி வளவிலுள்ள பற்றைகளை வெட்டுமாறு வலி.வடக்குப் பிரதேச சபைக்கு அரச அதிபர் பணித்துள்ளார்.

வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவியுடன் இந்த நிலையத்தை புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் -

புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் நிலையத்தில் உள்ள கருவியை திருத்துவதற்காக அந்தக் கருவியை உற்பத்தி செய்த கனேடிய நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவிருப்பதாகவும் - அரச அதிபர் தெரிவித்தார். (ம-3-139)

## அடுத்த சுற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் விடயத்துக்கு புலிகளின் ஆயுதக் களைவை ஒரு நிபந்தனையாக விதிக்கும் இராணுவத் தரப்பின் போக்கு. புலிகளின் தலைமைத்துவத்தை பெரும் சீற்றத்துக்கும் விசனத்துக்கும் உள்ளாக்கியிருப்பதாகத் தெரிகின்றது.

"சுமார் ஒருவருட காலமாக இந்த சமாதான முயற்சிகள் இழுபட்டுத் தொடர்கின்றன. புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் யுத்தநிறுத்த ஏற்பாடுகளின் பின்னர் இந்தச் சமாதான முயற்சிகளின் மூலம் எட்டப்பட்ட ஆக்கபூர்வமான விடயம் இரு உப குழுக்கள் அமைக்கப்பட்டதுதான்.

"மோதல் தணிவு மற்றும் இயல்பு நிலைக்கான உப குழு, உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுப் பணிக்கான உபகுழு ஆகிய இரண்டினதும் பணிகளில் முக்கியமானது நாட்டுக்குள் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் மனிதாபிமானப் பணி.

"ஏற்கமுடியாத நிபந்தனைகளை இந்த மனிதாபிமானப் பணிகளுக்கு முட்டுக்கட்டையாகப் போட்டதன் மூலம் இதுவரை காலமும் நீண்டு சென்ற பேச்சுக்களின் பெறுபேறையும் இணக்கத்தையும் இராணுவம் கேள்விக்கும் சந்தேகத்துக்கும் உள்ளாக்கிவிட்டது.

"இந்நிலையில் பேச்சுக்களை இழுப்பதற்கு அர்த்தம் ஏதும் இல்லாமல்போய்விடும்.

"அதற்காக பேச்சை முறித்துக் கொண்டு யுத்தத்துக்கு திரும்பி விடுவோம் என்று அர்த்தம் அல்ல.

"ஆனால், சமாதானப் பேச்சுகள் மீது எமக்குள்ள நம்பிக்கையை தகர்ப்பதற்கு இராணுவத் தரப்பு எடுக்கும் முயற்சிகளுக்கு அரசு துணை போகக்கூடாது. அப்படி துணைபோய் பேச்சுக்கு பாதிப்பை ஏற்படுத்துவது சமாதானப் பாதையை இருட்டில் ஆழ்த்திவிடும்.

"மக்களின் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு - மனிதாபிமானப் பணி - உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். அது பேரம்பேசும் விவகாரமல்ல.

"அதேநேரம், புலிகளின் ஆயுதக் களைவு என்ற விவகாரமும் இப்போதைய நிலையில் பேச்சுக்கு உரியதோ பேரத்துக்கு உரியதோ இல்லை.

"இந்த விடயங்களில் பேரம் பேசும் பேச்சுக்கே இடமில்லை.

"அடுத்த சுற்று தாய்லாந்து பேச்சில் இந்த இறுக்கமான நிலைப்பாடு அரசுத் தரப்புக்கு உறைக்கத் தக்க வகையில் உணர்த்தப்படும்"

- இப்படி அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிபந்தனைகளை அடியோடு நிராகரித்து கடந்த 26ஆம் திகதி புலிகள் ஓர் அறிக்கையை விடுத்திருந்தனர்.

அந்த அறிக்கை தொடர்பாக இராணுவத் தளபதி பலகல்ல விடுத்த செய்திக் குறிப்பிலேயே மேற்படி விவரத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

ஜெனரல் பலகல்ல மேலும் தெரிவித்திருப்பதாவது:-

'சமாதானத்திற்கும் இயல்பு நிலைக்குமான பாதையில் தாண்டமுடியாத தடைகளை இராணுவம் போடுகின்றது' என்றும் -

'சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் இந்த நிலையில் மீளக்குடியமர்த்தல் தொடர்பான மனிதாபிமானமான செயற்பாட்டுக்கு இவ்வாறான நிபந்தனைகளை முன்வைப்பது தற்போதைய சமாதான முயற்சியை தடைசெய்யும் உள்நோக்கம் கொண்டது' என்றும் -

புலிகள் அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

சமாதான முயற்சிகளை நாம் சந்தேகத்துக்கு அப்பால் ஆதரிக்கின்றோம் என்பதை இராணுவத் தளபதி என்ற முறையில் அதிகாரிகள் மற்றும் துருப்புக்கள் சார்பில் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நாட்டின் ஆளுபுல ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாக்க வேண்டிய உயரிய பொறுப்பு இராணுவத்துக்கு உள்ளது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

இந்த நோக்கில்தான் பாதுகாப்புப் படைகளின் யாழ்.தளபதி சில நிபந்தனைகளை பிரேரித்தார்.

அப்படிச் செய்வது சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்படுத்துவது ஆகாது என்பது தெளிவாக வலியுறுத்தப்படவேண்டும்.

ஸ்ரீலங்காவின் சகல இனங்களையும் பாதிக்கக்கூடிய தேசிய பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை கூறுவது பொதுக் கடப்பாடு என்று இராணுவம் திடமாக நம்புகின்றது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## உரும்பிராய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது21) என்பவரை கைதுசெய்து எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சிறுமியின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி யாழ். சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொலை தொடர்பாக மேலதிக விசாரணை நடத்தும்படியும் -

கைவிரல் அடையாள நிபுணர்களை கொழும்பில் இருந்து அழைத்துவந்து கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் - நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

சிறுமியின் பிரேத பரிசோதனை இன்றே இடம்பெறவுள்ளது என்று தெரிகிறது.

யாழ்.சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சடலத்துக்கு பொலீஸார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

(சிறுமியின் மரணம் பற்றிய விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்) (ம-3)

# பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் நேற்று சந்திப்பு

குடாநாட்டில் 1995, 96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணமற்போனோரின் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சங்கத்தின் பத்துப்பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் தமிழ்ச்செல்வனிடம் தமது சோகக்கதைகளை எடுத்துக் கூறி தமது உடன்பிறப்புக்கள் குறித்து தகவல் பெற உதவுமாறு கோரினார்.

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும் கலந்துகொண்டார். (ம-3)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு குளிரூட்டல் அறை!

## கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டது

யாழ்.போதனா வைத்தியசாலைக்கென குளிரூட்டல் அறை (Cool room) ஒன்று நேற்று கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி 17லட்சம் ரூபா என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த குளிரூட்டும் அறைக்குள் பெருமளவு மருந்துப் பொருள்களை பாதுகாத்து வைக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

முதல் முறையாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்தக் குளிரூட்டல் அறை 10 அடி நீளத்தையும், 10அடி அகலத்தினையும் கொண்டதாகும். (ம-12)

### நீதிவான்கள் இடமாற்றம்

யாழ். மேலதிக நீதிவானாகப் பணியாற்றிய திருமதி ச.இளங்கோவன் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மல்லாகம் நீதிவானாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் நீதிவானாகப் பணியாற்றிய பா.சுப்பிரமணியம் ஊர்காவற்றுறை நீதிவானாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நீதிச்சேவை ஆணைக்குழு இதற்கான உத்தரவை நேற்று அனுப்பியுள்ளது. (ம-3)

## உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

"படைகளை விலகுமாறு கேட்கவில்லை என்று பாலசிங்கம் தெரிவித்த கருத்தை வரவேற்கிறோம். அடுத்து வரும் சந்திப்புகளில் அவரின் ஆலோசனையை ஆராய்வோம்." - என்றார் அவர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், அன்ரன் பாலசிங்கம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கே பதில் அளித்துள்ளார். அரசுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றார். (ம-3-12)

## புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உபகுழுவின் அலுவலகத்துக்கு தேவையான வளங்கள், ஆளணிகள் போன்றவற்றை பெறும் நடவடிக்கைகளை தற்சமயம் மேற்கொண்டு வருகின்றோம். அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய ஆளணியை பெறவேண்டியுள்ளது. விரைவாக - உடனடியாக - மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, மீள்குடியமர்வு நடவடிக்கைகளை இனங்காண துணைக்குழுக்கள் அமைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் விவரங்களை அரசுத்தரப்பும் விடுதலைப் புலிகளும் இன்னமும் தரவில்லை.

குழுக்களுக்கான உறுப்பினர் விவரங்கள் கையளிக்கப்பட்டதும் அந்த விவரம் அடுத்த மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் இடம்பெறும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே துணைக் குழுக்கள் செயற்பட ஆரம்பிக்கும். அதன்பின்பே மாவட்ட மட்டக் கூட்டங்கள் இடம்பெறும் - என்றார் அவர். (ம-3)


**நலமான வாழ்வுக்கு என்றும் நலந்தருவது**

**புரோசிங் (PROZINC)**

★ இழந்த சக்தியை மீட்டெடுத்தல்.
★ இரத்த உற்பத்தியை அதிகரித்தல்.
★ வளரும் பிள்ளைகளுக்கு பசி உணர்வை தூண்டுதல்.
★ போன்றவற்றில் முக்கிய பங்கு வகிப்பதுடன்

புரோசிங் - அனைத்து விற்றமின்களுடன் அதியுயர் தாவரப் புரதச்சத்து நிறைந்துள்ளதால் சைவப் பிரியர்களுக்கும் உகந்தது.

புரோசிங் - கர்ப்பிணித் தாய்மார், விளையாட்டு வீரர், வளரும் பிள்ளைகள், முதியோர் என முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற சிறந்த பானம்.

புரோசிங் - தற்போது யாழ்.நகரின் அனைத்து மருந்தகங்களிலும் கிடைக்கப்பெறும்.




தொடர்புகளுக்கு :
JEGAN PHARMACY - யாழ். நகர். Tel: 222 3191
ARKEM - கொழும்பு. Tel: 470290, 071-341956
(C/25210)



**BEACON**

யாழ்நகர்

**A/L 2005 கலைப் பிரிவு**

எமது ஆசிரியர் குழு

| | |
|---|---|
| Log. | : S.S. மனோகரன் |
| தமிழ் | : நாக. தமிழிந்திரன் |
| இந்துநாகரிகம் | : உமாசுதசர்மா |
| கிறிஸ்தவம் | : துவாரகா |
| புவியியல் | : S.R. மாலா |
| நாடக அரங்கியல் | : T.J. சுதன் |
| புள்ளிவிபரவியல் | : தவசேகா |
| ஆங்கிலம் | : BRITTO |

ஆரம்பம் : 05.01.2003
நேரம் : 7 a.m. (12373)



**இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்**

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் ஆஸ்த்துமா, உடல்பருமன், சலரோகம், மூலம் (Piles), முகப்பரு, இளநரை, தலைமுடி கொட்டுதல், தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்க விளைவுகளுமின்றி பரிபூரணமாகக் குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப்பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்குத் தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
Dr.R.K.நவனீதன் DYNS, SMP, NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
இல.54, மணிக்கூட்டு வீதி,
யாழ்.உல்லாசப் பயணியர் விடுதி
(வெலிங்டன் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

முந்துங்கள்! இன்றும் நாளையும் மட்டுமே முகாம் நடைபெறும்.
(12414)

யோகாசன VCD கஸட்டுகள் கிடைக்கும்.


## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிப்பிள்ளை கணேசரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியை, இருபாலை C.C.T.M.S.)

கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி ஆச்சிப்பிள்ளை கணேசரத்தினம் அவர்கள் நேற்று (28.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசரத்தினத்தின் அன்பு மனைவியும் வள்ளியம்மை, முருகேசு (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கமலாதேவி பாலச்சந்திரா
(ஆசிரியை, யா/ கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்)

5ஆம் கட்டையடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (12446)


MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

**இலவசக்கணனிப்பயிற்சி**

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 31.12.2002 இற்கு முன்னர் நேரில்

SDW SDW SDW SDW SDW SDW SDW SDW SDW SDW


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.